● ஆச்சரியமான ஆய்வு முடிவுகள் ● புதுமைகளின் பிறப்பிடம்

தமிழ்
# PC TIMES

**WIN!**



Pen Drives
Free Subscriptions

ஏப்ரல் - 2007 ● APRIL - 2007
மலர் - 02 ● இதழ் - 02



# ஜெயிக்கப் போவது யாரு?

கணினிக் கல்லூரி


PCTIMES
கணினிக் கல்லூரி

இணைக்கப்பட்டுள்ளது

- Photoshop
- JAVA
- Ms Word
- Ms Excel
- Help Desk
- GIT


புதுசு! ICT for Grade 10 & 11

பீசீ ටයිම්ස් பீசீ டைம்ஸ்
Vol.02 Iss.02 Rs. 30/-
9 771391 502008

இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

# புதுவரவுகள்

Microsoft நிறுவனத்தின் ஆய்வுகள் பிரிவின் வருடாந்த கண்காட்சியான Techfest அண்மையில் வொஷிங்டனில் இடம்பெற்றது. மூன்று நாட்களாக இடம்பெற்ற கண்காட்சியின் போது உலகப் போக்கினை மாற்றுவதற்காக Microsoft உலகுக்கு வழங்கவுள்ள புதிய சாதனங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. அறிமுகம் செய்யப்பட்ட சாதனங்களில் சில முக்கியமானவைகள் இம்முறை புதுவரவுகள் பகுதியூடாக உங்கள் பார்வைக்கு...




1



4

**❶ TEXT2PAPER** கையடக்கத் தொலைபேசிகளில் வரும் SMS தகவல்களை ஒட்டும் தகவுடைய கடதாசிகளில் அச்சுப்பதிக்கும் சாதனம்.

**❷ Text-It-Notes** கையால் எழுதும் எழுத்துக்களை கண்டறிந்து அவற்றை கையடக்கத் தொலைபேசியூடாக அனுப்பக்கூடிய SMS தகவல்களாக மாற்றும் சாதனம்.

**❸ Boku** சிறுவர்கள் கணினி மொழிபற்றி கற்பதைத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கார்ட்டூன் ரோபோ கணினி விளையாட்டு மென்பொருள்.

**❹ Epigraph** குடும்ப அங்கத்தவர்களிடையே விரைவாக SMS, Email போன்றவற்றை அனுப்புவதை சாத்தியமாக்கும் கணினி உருவான சாதனம்.


**❺ Workers** கையடக்கத் தொலைபேசியிலிருந்து கூட்டம் நடக்கும் இடத்திலுள்ள திரைக்கு தகவல்களை அனுப்பு வதை சாத்தியமாக்கும் தொழில்நுட்பம்.



2




3



5

தொகுப்பு : CZ

AP PHOTO / TED.S.WARREN

தமிழ் PC TIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை
APRIL 2007 • VOLUME 02 • ISSUE 02

உள்ளடக்கம்

02 புதுவரவுகள்
04 ஆசிரியர் தலையங்கம்
05 செய்திப் பக்கம்
முகப்பின் முகவரி
06 ஜெயிக்கப் போவது யாரு?
Open Source vs. Closed Source
09 Microsoft க்குத் தலையிடி
26 செல்லரிக்காத நிழற்படங்கள்
27 Civilization IV
28 ஆச்சரியம் தந்த ஆராய்ச்சி
29 மீள் சுழற்சி
30 புதுமைகள் செய்யும் Google
32 கோப்புகளைப் பூட்டி வைக்கலாம்
33 நறுமணம் கமழும் இணையம்
34 வாசகர் திருமுகம்
35 இணைய வெளி























## கணினிக் கல்லூரி

கணினிப் பாட இணைப்பிதழ்

- Ms Word
- Photoshop
- Ms Excel
- GIT
- Help Desk
- Java
- ICT for Grade 10 & 11

11-26

PC TIMES

No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02, Sri Lanka
Tel : +94 11 2 479512
email : pctimes@wijeya.lk

wijeya newspapers

Printers & Publishers
WIJEYA NEWSPAPERS LTD
No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02,
Sri Lanka
Tel : +94 11 2314714

**Editor**
K.Rushangan
*editorpctimes@wijeya.lk*

**Sub Editor**
Tharique Azeez

**Layout Designer**
R.Vinothini

**Editorial Coordinator**
R.R. Jeyakeshan

**Assistant Manager Supplements & IT Publishing**
Sunanda Karunaratna

**Production Manager**
Ashley Cooray

**Circulation Manager**
Rohan Fonseka

**Information Systems Manager**
Naveen Gunaratne

**Desktop Publishing Manager**
Chandana Dasanayke

**Advertising Sales Manager**
Saaranga Wijeratne

**Subscription Executive/Sales**
Ranjith Rupasinghe

**Brand Manager**
Sujith Pathirannehe



## தமிழ் PCTIMES இன் சந்தாதாரராகுங்கள்!!

### உள்நாட்டு சந்தாக் கட்டணங்கள்

| காலம் | கொழும்பு நகர எல்லைக்குள் | உள்ளூர் தபால் |
|---|---|---|
| ஒரு வருடம் | 360.00 | 408.00 |
| ஆறு மாதம் | 180.00 | 204.00 |

### வெளிநாட்டு சந்தாக் கட்டணங்கள்

வெளிநாட்டு தபால்

| காலம் | "அ" வலயம் | "ஆ" வலயம் | "இ" வலயம் | "ஈ" வலயம் |
|---|---|---|---|---|
| ஒரு வருடம் | 900.00 | 1,104.00 | 1,212.00 | 1,548.00 |
| ஆறு மாதம் | 450.00 | 552.00 | 606.00 | 774.00 |

"அ" வலயம் :-
ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான்

"ஆ" வலயம் :-
ஈடென், பாஃரேன், பேர்மா, ப்றூணி, டுபாய், ஹொங்கொங், டோஹா, இந்தோனஷியா, ஈரான், ஈராக், குவைத், மலேசியா, ஓமான், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்னாம், லாவோஸ், ஜோர்தான், டமார், தெஹ்ரான், றியாத்

"இ" வலயம் :-
ஒஸ்ரியா, அவுஸ்ரேலியா, பொட்ஸ்வானா, சீனா, சைப்ரஸ், டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், பூஜீ தீவு, கானா, கம்பியா, ஜேர்மனி, ஹோலன்ட், ஜப்பான், மலாவி, மதீரியா, மாலி, நியூசிலாந்து, நெதர்லாந்து, பப்புவா நியூ ஜீனியா, தென்னாபிரிக்கா, ஸ்வீடன், ஸ்பெய்ன், தெற்கு தாய்வான், ஐக்கிய இராச்சியம், சோவியத் ரஷ்யா, உகண்டா, சம்பியா, ருமானியா, இத்தாலி, சிம்பாப்வே, பிலிப்பைன்ஸ்

"ஈ" வலயம் :-
கனடா, ஜீனியா, ஐக்கிய அமெரிக்கா, க்யூபா, பேர்முடா

காசுக்கட்டளையை அனுப்புவோர் பணம் செலுத்தும் தபால் அலுவலகமாக Slave Island எனக் குறிப்பிட்டு அனுப்பவும். காசோலைகளை அனுப்புவோர் WIJEYA NEWSPAPERS LTD. என்ற பெயருக்கு காசோலைகளை எழுதுதல் வேண்டும். காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகளை நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

Circulation Manager,
Wijeya Newspapers Ltd.
No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02,
Sri Lanka.
Tel : 2307789, 2 314714 Ext. 626,
Fax : 2459725, email : subs@wijeya.lk

### விளம்பரக் கட்டண விபரம்

| | முழுப்பக்கம் | ½ பக்கம் | ¼ பக்கம் | ⅛ பக்கம் |
|---|---|---|---|---|
| பின்னட்டை | 25,000.00 | - | - | - |
| பின் உள்ளட்டை (வர்ணம்) | 22,500.00 | - | - | - |
| முன் உள்ளட்டை | 20,000.00 | - | - | - |
| உள்பக்கம் (க/வெ) | 10,000.00 | 6,000.00 | 3,000.00 | 1,500.00 |
| உள்பக்கம் (க+1) | 12, 500.00 | 6,500.00 | 3,500.00 | 1,750.00 |
| உள்பக்கம் (க+2) | 15,5000.00 | 8,000.00 | 4,000.00 | 2,000.00 |
| உள்பக்கம் (வர்ணம்) | 17,500.00 | 9,000.00 | 4,500.00 | 2,500.00 |

விளம்பரத் தொடர்புகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

Advertising Manager,
Wijeya Newspapers Ltd.,
48, Parkway Building, Park Road,
Colombo - 02.


# சாத்தியங்களின் எல்லைகள்

இன்று உலகின் அனைத்துச் செயற்பாடுகளிலும் கணினி தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டது. கணினியின் அனுசரணையின்றி அன்றாடச் செயற்பாடுகள் எதனையும் செய்ய முடியாது என்ற நிலை வேகமாக உருவாகி வருகிறது.

இவ்வாறு மனித வாழ்வை ஆக்கிரமித்து நிற்கும் கணினித் தொழில்நுட்பத்தின் மீதான 95 சதவீத ஆதிக்கத்தை, அதன் பணிசெயல் முறைமையினூடாக Microsoft நிறுவனம் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. இப்படிப் பார்த்தால், Microsoft நிறுவனத்தின் உரிமையாளரான Bill Gates இன் ஆதிக்கத்தின் கீழ் உலகின் 95 சதவீத கணினிகள் இருக்கின்றன என்று சொல்லலாம்.

தகவல் தொழில்நுட்பத்தின் மீதான இந்த ஆதிக்கத்தை நிலைநிறுத்தியிருக்கும் உலகின் முதலாவது பணக்காரரான Bill Gates ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய்ப் பாடம் படிக்காதவர். சுய சிந்தனை வளர்ச்சி, மற்றும் அயராத உழைப்பின் மூலமே அவர் இந்த நிலையை எட்டியிருக்கிறார். சுயமான சிந்தனையும், சளைக்காத உழைப்பும் ஒரு மனிதனை எந்தளவு உச்சத்துக்கு எடுத்துச் செல்லும் என்பதற்கு Bill Gates ஒரு வாழும் உதாரணம்.

எனினும், தகவல் தொழில்நுட்பத்தின் மீதான அவருடைய இந்த ஆதிக்கத்தை உடைக்கவென Open Source சிந்தனையாளர்கள் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். Microsoft க்கு மாற்றீடாக, அதே செயற்றிறனுடன் கூடிய அனைத்து வகையான பணிசெயல் முறைமைகளையும், மென்பொருள்களையும் Open Source எனப்படும் திறந்த மூலச் செயற்பாட்டாளர்கள் உருவாக்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

இவர்களுடைய இந்தப் போராட்டத்தின் மூலம், 1 சதவீதக் கணினிகளின் பணிசெயல் முறைமைகளைத்தான் இவர்களால் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடிந்திருக்கிறது என்றாலும், இணையத்தள மேடைகளில் இவர்களின் ஆதிக்கம் வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது.

Microsoft வல்லவன் என்றால், Open Source செயற்பாட்டாளர்கள் வல்லவனுக்கு வல்லவர்களாகப் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டுமே சாதனைகளின் சாத்தியங்களைக் கோடிட்டுக் காட்டும் எல்லைகள் என்றால் மிகையில்லை.

*-ஆசிரியர்*

# IT NEWS HIGHLIGHTS

தொகுப்பு : உதய தாரகை

## எல்லோருக்கும் சந்தர்ப்பம்

Social networking site எனப்படும் நண்பர்கள் சேர்ந்து இணைந்து பழகும் இணையத்தளங் களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். இவ்வாறான இணையத்தளங்களில் Facebook, My space போன்றன மிகவும் பிரபல்யமானவை. இப்படிப்பட்ட தளங்களை அமைக்க விரும்பும் அனைவரும் தமக்கு ஏற்றாற்போல் அமைத்துக்கொள்ளும் வசதியை ஒரு இணைய நிறுவனம் வழங்கியுள்ளது.

Ning.com எனப்படும் இந்த இணையத்தளத்தில் விருப்பமான எவரும் தமக்குச் சொந்தமான Social networking site ஐ உருவாக்கிக் கொள்ள முடியும். இது முற்றிலும் இலவசமான சேவை என்பது மிகவும் இனிப்பான செய்தி. தளத்தினை கையாளத் தேவைப்படும் அனைத்து மென்கருவிகள், மற்றும் உதவிகள் ஆகியவற்றை குறித்த நிறுவனம் இலவசமாகவே வழங்குகின்றது.

## விக்கிபீடியாவில் போலி பேராசிரியர்

தகவல்களின் மொத்தத் திரட்டாகிய விக்கிபீடியா, தொடர்ந்தும் பிழையான தகவல்களுக்கெதிராக போராடி வருகின்றது. தன்னைப் பற்றி பொய்யான விபரங்களை வழங்கி, விக்கிபீடியாவில் சிறப்பு உறுப்புரிமையைப் பெற்று, பல ஆக்கங்களை தொகுத்திருந்தார் ஒருவர். Essjay எனும் பெயரால் என்னை தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டுள்ளார்.

சமயத்திற்கான பேராசிரியராக தாம் தனியார் பல்கலைக்கழக மொன்றில் கடமை புரிவதாகக் கூறியுள்ள இவர், தான் சமயத்தில் PhD பட்டம் பெற்றுள்ளதாகவும் தன்னை அறிமுகம் செய்துள்ளார். இருந்தபோதும், இவர் 24 வயதுடைய Ryan Jordan எனும் கல்லூரி மாணவர் என பின்னர் அறியப்பட்டார்.

இவரால் விக்கிபீடியாவிற்கு வழங்கப்பட்ட தகவல்கள் பிழையற்றவை என அறியப்பட்டுள்ளதோடு, இவர் ஆக்கங் களைத் தொகுப்பதற்கு சமய நூல்களை உசாத்துணையாகக் கொண்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது. விக்கிபீடியாவை "சிறந்த தகவல்களின் மையமாக உருவாக்க நான் செய்த முயற்சியே இது. இம் முயற்சியில் உண்மைகளையே நான் பதிவு செய்துள்ளேன்" எனக் கூறி, விக்கிபீடியாவிலிருந்து குறித்த மாணவன் விடைபெற்றுக்கொண்டார்.

## குருதி உறைதல் அபாயம்



அதிக நேரம் கணினியின் முன்னால் இருந்து கொண்டு வேலை செய்பவர்களுக்கு குருதி உறைதல் அபாயமுண்டென கண்டறியப்பட்டுள்ளது. நியூசிலாந்தின் வெலிங்டன் நகரின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் Richard Beasley மேற் கொண்ட ஆய்விலிருந்தே மேற்படி முடிவு கண்டறியப் பட்டுள்ளது. DVT எனப்படும் குருதி உறைதல் ஏற்பட்டு, உறைந்த குருதித் துணிக்கைகள் உடல் பூராகப் பயணிப்பதால், நெஞ்சுவலி, மூச்செடுப்பதில் சிரமம் ஏற்படுவதுடன், சிலவேளை மரணமேற்படவும் வாய்ப்புண்டென அறிவிக்கப்படுகிறது. இக்குருதி உறைதல் கால்களிலேயே ஏற்படும் நிலை உண்டென்பதுடன், தொடர்ந்து கணினியின் முன்னாள் 3-4 மணி நேரம் அல்லது ஒரு நாளைக்கு 14 மணி நேரம் இருப்பவர்களுக்கு இக்குருதி உறைதல் ஏற்படும் நிகழ்தகவு உயர்ந்ததாகும். Economy Class syndrome என இனங்காணப்படும் இவ்வகை குருதி உறைதல் நோயானது, தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலையிலீடுபவர்களை அதிகம் தாக்கும் சாத்தியமுண்டு என மருத்துவ பெறுபேற்று அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

## சன்டெல்லின் புதிய சேவை

வர்த்தக நிறுவனமொன்றுக்குத் தேவையான தொலைத் தொடர்பு சார்ந்த அனைத்துச் சேவைகளையும் சிறந்த வினைத்திறனுடன் வழங்கும் பொருட்டு, 'Suntel Enabled' எனும் சேவையை Suntel நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. வர்த்தக நிறுவனங்களின் காரியங்களை இலகுபடுத்துவதில் இச்சேவை பெரிதும் உதவக்கூடுமென அறிமுக நிகழ்வில் குறிப்பிடப்பட்டது. பல வர்த்தக நிறுவனங்கள் குறித்த சேவையைப்பெற்றுக் கொள்ளத் தம்மைப் பதிவுசெய்து கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## முதன் முதலாய்



எஸ்டோனியா நாட்டில் உலகின் முதல் முதலாக இணையத்தி னூடாக இலத்திரனியல் முறையில் வாக்களிப்பு நடைபெற்றது. இது e-Voting எனப்படுகின்றது. படத்தில் எஸ்டோனியாவில் பிரதம மந்திரி என்ரஸ் அன்சிப் ஒரு இலத்திரனியல் அட்டை மூலம் வாக்களிக்கின்றார்.

AFP PHOTO/RAIGO PAJULA

Microsoft நிறுவனம் வழங்கும்
Closed-Source மென்பொருள்களிலும் பார்க்க
Open Source வகை
மென்பொருள்களின் திறன் சளைத்ததா?



# ஜெயிக்கப் போவது யாரு?

*தாரிக் அஸீஸ்*


பல வருடங்களாக மென்பொருள் உலகில் ஜாம்பவானாகத் திகழும் Microsoft அதன் நிலையை இன்னும் இழக்கவுமில்லை, இழக்கத் தயாராகவுமில்லை. Microsoft இன் மென்பொருள் தொகுதிகளுக்கு மிகப் போட்டியாக, அத்தனை பண்புகளையும் கொண்ட பலவேறுபட்ட மென்பொருள்கள் சந்தைக்கு வந்துள்ளபோதும், அவை Micosoft இன் நகர்வில் பாதிப்பெதனையும் ஏற்படுத்திவிடவில்லை.


இலவசம் என்பதற்கே இலக்கணம் கூறுமாற்போல், மக்கள் மனதைக் கொள்ளை கொள்ளுமளவுக்கு மிகப் பிரபல்யமடைந்துவரும் Open Source எனும் திறந்த ஆணைமூல செயற்பாடுகள், Microsoft ஐ மட்டுமல்லாது, Closed Source மென்பொருள்களைச் சந்தைப்படுத்தும் அத்தனை பேருக்குமே சவாலாக உருவெடுத்துள்ளன.

தீப மந்திரம்

Linux · APACHE · MySQL · php

வெவ்வேறு பணிசெயல்முறைமையின் பாவனை பரம்பல்







Closed Source மென்பொருள்கள் செய்யும் அத்தனை வேலைகளையும், அதேபோல், சில வேளைகளில் அவற்றை விட மிக இலேசாகச் செய்யக்கூடிய வாய்ப்பை உண்டுபண்ணியுள்ள Open Source வகை மென்பொருள்கள், பயனர்களிடையே இலவசமாகவே பகிரப்படுவது இனிப்பான செய்தியே. அது மட்டுமல்லாது, குறித்த மென்பொருள்களைப் பாவிப்போருக்கு அவை 04 அடிப்படைச் சுதந்திரங்களையும் வழங்குகின்றது.

எந்த நோக்கத்திற்காகவும் மென்பொருளை உபயோகிக்கும் சுதந்திரம், அந்த மென்பொருளைப் பற்றிக் கற்றல், மற்றும் அதில் வேண்டிய மாற்றங்களைச் செய்தல் ஆகியவற்றிற்கான சுதந்திரம், மென்பொருளை பிரதி செய்வதற்கான சுதந்திரம், மென்பொருளை மேம்படுத்துவதற்கான சுதந்திரம் ஆகிய நான்குமே அவையாகும்.

இவற்றுள் எந்தச் சுதந்திரமும் Closed Source மென்பொருள்களில் காணப்படாததால், பயனர்களின்




புலமைச்சொத்து: Open Source வகை மென்பொருள்களில் புலமைச் சொத்து பிரச்சினைகள் இல்லை.

விருப்பத்திற்கேற்ப அவற்றை மாற்றிப் பயன்படுத்தும் வசதி இருப்பதில்லை. இதனால், சுதந்திரம் என்பதை அனுபவிக்க எண்ணியவர்கள் Open Source பக்கம் வருவது தவிர்க்க முடியாததே!

உலகளவில் 95% ஆன கணினிகளில் பணிசெயல் முறைமையாக Microsoft இன் Windows பணிசெயல் முறைமைகளே பயன்பாட்டில் உள்ளதாக கணக்கிடப் பட்டுள்ளது. அத்தோடு, 1% ஆன கணினிகளே Linux போன்ற Open Source வகை பணிசெயல் முறைமையைப் பாவித்தியங்குவதாக அக்கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், மொத்த இணையத் தளமேடையை ஆளுகை செய்து ஒருங்கிணைத்து இயங்கச்செய்யும் சேவையகங்களில் 64 சதவீதமானவை Apache Web Server எனும் Open Source வகை மென்பொருள் நிறுவப்பட்டு பாவிக்கப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. 27 சதவீதமான சேவையக கணினிகளிலேயே Microsoft இன் Web Server மென்பொருள் நிறுவப் பட்டுப் பாவிக்கப்படுவதாக ஆய்வு மேற் கொண்ட Netcraft நிறுவனம் தெரிவிக் கின்றது.


இணையத் தளமேடையை வலிமை யாக்கி, அதன் செயற்திறனை ஆளும் Open source வகை மென்பொருள்கள் இன்றைய நிலையில் பல செயற்பாடுகளிலும் பாவிக்கப்படுகின்றன. Microsoft Office மென்பொருள் தொகுதிக்கு மாற்றீடாக Open Office.org எனும் Open Source வகை மென்பொருள் தொகுதியும், Adobe Photoshop மென்பொருளுக்கு மாற்றீடாக, அத்தனை Photoshop பண்புகளை யுமுடைய GIMP எனும் Open Source வகை மென்பொருளும் இப்போது கணினி பயனர்களிடையே புழக்கத்திலுள்ளன.

LAMP எனப்படும் "தீப மந்திரம" Open Source வகை நிலைகளில் மிகப் பிரபலமானது. LAMP எனப்படுவது, வேறுபட்ட நான்கு Open Source வகை மென்பொருள்களின் பெயர்களின் முதலெழுத்துக்களை இணைப்பதன் மூலம் பெறப்பட்டதாகும். L என்பது Linux எனும் Open Source வகை பணி செயல்முறைமையை குறிப்பதாகும். A என்பது Apache எனப்படும் Open Source வகை Server களுக்கான மென்பொருளைக் குறிக்கும். MySQL எனும் இணைய அடிப்படையான Open Source வகை தரவுத் தள (Database) மென்பொருள் M ஆல் குறிக்கப்படுகிறது. அத்தோடு, P என்பதனால் php எனும் Open Source வகை இணைய அடிப்படையான கணினி மொழி குறிக்கப்படுகிறது. இந்த நான்கு மென்பொருள்களும் ஒன்றிணைந்து தீபமாக இணையத்தள மேடைக்கு ஒளி வழங்கி வலிமையடையச் செய்கிறது.

ஒன்றோடொன்று தொடர்புடைய தாயமைந்து இணையத்தளமேடையை பலப்படுத்தும் இவ்வகை மென்பொருள் கள் போன்று Closed Source வகை மென்பொருள்கள் எதுவும் இதுவரையில் களத்தில் இறங்கவில்லை. அதனாலே, Open Source வகை மென்பொருள்கள் இணையத்தள மேடையில் முழு ஆதிக்கத்தையும் செலுத்துகின்றன.


Open Source வகை மென்பொருள்கள் பாவனைக்கு இலகுவாக அமைவதோடு, Source code எனப்படும் மென்பொருள் செய்யப்பட்ட செய்நிரல் ஆணைமூலம் குறித்த மென்பொருளோடு வழங்கப் படுவதால், பயனர்கள் தமது தேவை களுக்கேற்ப மென்பொருள்களை தனிப்பயனாக்கம் (Customize) செய்து கொள்கின்றனர். நாளுக்கு நாள் Open Source வகை மென்பொருள்கள் யாவும் இற்றைப்படுத்தப்பட்டுக் (Updated) கொண்டேயிருக்கின்றன. ஆனாலும், Closed Source வகை மென்பொருள்கள் புதிய பண்புக்கூறுகளால் இற்றைப் படுத்தப்பட நிறையக்காலம் எடுக்கும். இணையம் என்பது "மாற்றங்களின் மண்டபம்" என்பதனால், Closed Source மென்பொருள்கள் இங்கு ஆதிக்கம் செய்ய எந்த வாய்ப்பும் இல்லை.

OpenOffice.org இன் ஏற்கனவே காணப்பட்ட பல பண்புக்கூறுகளை,




இணைப்பு: உலகளவில் இணையத் தள மேடையை வலிமையாக்கும் பணியை Open Source செய்கிறது.

TOP : AFP PHOTO/A HMAD - AL-RUBAYE BOTTOM : AFP PHOTO/NIGEL TREBLIN



முனைப்பு : பல நாடுகள் Open Source வகை மென்பொருள்களை பாவிக்க முனைந்துள்ளன.

Microsoft புதிதாக வெளியிட்டுள்ள Microsoft Office 2007 மென்பொருள் தொகுதியில் சேர்த்துள்ளது. எடுத்துக் காட்டாக, ஆவணங்களை PDF ஆக மாற்றும் வசதி, Open Document Format இல் ஆவணங்களை சேமிக்கும் வசதி போன்றவற்றைக் குறிப்பிடலாம். Open Source வகை மென்பொருள்கள் மிக வேகமாக முந்திக்கொண்டு புதிய உத்திகளைப் பயன்படுத்தி புதிய பண்புக் கூறுகளை இணைப்பதில் மும்முரம் காட்டி வருகின்றன.

இணையம், கணினிப் பாவனையில் சம்பந்தப்படும் நிலையில் தனி மனித சுதந்திரம் (Privacy) மற்றும் பாதுகாப்பு (Security) பற்றி பயனர்கள் அதிகம் கவனம் எடுக்க வேண்டியேற்படும். Open Source வகை மென்பொருள்கள் பயனர்களினால் அடிக்கடி இற்றைப்படுத்தப்படுவதனால், பாதுகாப்பு, Privacy தொடர்பில் அவை மிக வலிமையானவை என்றே சொல்லவேண்டும். Closed Source இல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நிலைகள் அவதானிக்கப்பட்டபோதும், அவை திருத்தப்பட பல காலம் எடுக்கும். இதற்கிடையில், பாதுகாப்புத் தொடர்பில் இன்னும் பல துளைகள் மென்பொருளில் இனங்காணப்பட்டு விடும். ஆக, பாதுகாப்பு, Privacy இலும் Open Source மென்பொருள்களை தோற்கடிக்க இன்னும் பல காலம் Closed Source மென்பொருள்களுக்கு எடுக்கலாம்.

பாதுகாப்பு, தனிமனித சுதந்திரம் என்ற விடயங்களுக்கு அப்பால், Closed Source வகை மென்பொருள்களின் விலையோ மிக உயர்வாக காணப்படுவதால். அம் மென்பொருள்கள் செய்யும் அத்தனை காரியங்களையும், சிலவேளை அவற்றை விடமேலதிகமானபலசெயற்பாடுகளையும் செய்யக்கூடிய Open Source வகை மென்பொருள்களை நாடி கணினி பயனர்கள் செல்வதில் ஆச்சரியமில்லைத்தான். இன்றைய நிலையில் Closed Source மென்பொருள்களை கொள்வனவு செய்ய செலவழிக்கும் பணத்தை மீதப்படுத்த பல நாடுகளும் Open Source வகை மென்பொருள்கள் பக்கம் தங்கள் கவனத்தை திருப்பியுள்ளன. Open Source வகை மென்பொருள்கள் இலவசமாகக் கிடைப்பதால் இந்த நகர்வு ஏற்பட்டுள்ளதாக எண்ணலாம்.

ஜேர்மனி, பிரான்ஸ், பின்லாந்து, பிலிப்பைன்ஸ், தென்கொரியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் Open Source வகை மென்பொருள்களை தங்கள் நாடுகளின் திணைக்களங்களில் பாவித்து பரீசிலிக்க முடிவுசெய்துள்ளன. குறித்த மென்பொருள்களில் பாதுகாப்பு மிக உச்ச அளவில் இருப்பதும், செலவை இழிவளவாக்குவதுமே இந்த முன்னெடுப்புக்குக் காரணங்களாகுமென அந்நாட்டு அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்து கணினி ஆய்வு நிலையங்களை அமைத்து அதனூடாக புதிய Open Source வகை மென்பொருள்களை உருவாக்கி மேம்படுத்தி தமது நாடுகளில் பயன்படுத்துகின்றன. எதிர்கால Closed Source மென்பொருள்களின் தன்மையை நிர்ணயிக்கும் சக்தியாக Open Source வகை மென்பொருள்கள் மாறி வருவதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கியூபா ஆகியன தமது கணினி மையங்களை Open Source வகை மென்பொருள்கள் மூலம் பலப்படுத்தியுள்ளதாக அறிவித்ததையும் தமிழ் PCTIMES மூலமாக அறியத் தந்திருந்தோம்.

Closed Source வகை மென்பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் ஜாம்பவான் Microsoft நிறுவனமே, Open Source முன்னணியின் செயற்பாட்டால் கதிகலங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும், Microsoft உம் அதன் மென்பொருள்களை பல்வேறுபட்ட சகாய

**இணையப் பாவனையாகட்டும், தனிநபர் கணினிப் பாவனையாகட்டும் அத்தனை விடயங்களையும் இலகுவில் சாத்தியமாக்கும் தொழில்நுட்பங்களை வழங்கும் மூலங்களாக Open Source, Closed Source ஆகியன தொழிற்படுகின்றன.**

விலைகளில் வழங்கும் திட்டங்களை முன்னெடுத்துள்ளதும் கவனிக்கப்பட வேண்டும்.

தாய்வானில் Microsoft ஏ மென்பொருள் வழங்கலில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான கம்பனியாக இருக்கிறது. ஆனாலும், தாய்வான் அரசாங்கம் Open Source வகை மென்பொருள்கள் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவிகளை வழங்கி. இந்நிலையை மாற்ற பல முன்னெடுப்புகளை மேற்கொள்வதாக தகவல் தொழில்நுட்ப குழுவின் அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

இந்த அத்தனை நகர்வுகளும், மொத்தமாக கணினிப் பயனர்களுக்கு எண்ணிலடங்கா நன்மைகளை வழங்கப் போவது திண்ணம். Microsoft ஆனது Linux போன்ற பணிசெயல் முறைமைளின் துரித வளர்ச்சியைத் தடுக்க எண்ணினால், ஒரேயொரு வழி மட்டுமே உண்டு. Microsoft இன் வெளியீடுகளை இலவசமாக வழங்குவதுதான் அவ்வழியாகும். ஆனால், இது எப்போதும் சாத்தியமாக முடியாத ஒரு நிலையே. ஆதலால், போட்டியும், புதிய ஆராய்ச்சிப் பெறுபேறுகளும் Open Source மற்றும் Closed Source மென்பொருள்களின் சார்பில் எழுந்து கொண்டே இருக்கும்.

இணையப் பாவனையாகட்டும், தனிநபர் கணினிப் பாவனையாகட்டும் அத்தனை விடயங்களையும் இலகுவில் சாத்தியமாக்கும் தொழில்நுட்பங்களை வழங்கும் மூலங்களாக இரண்டு முக்கிய மென்பொருள் வகையுமே ஒன்றுடனொன்று போட்டியிட்டு புதிய பண்புக்கூறுகளை வழங்குவதில் ஆதிக்கம் செலுத்துகின்றன. வெல்வது யாராக இருந்தாலும், இந்த ஆரோக்கியமான போட்டியால் கணினிப் பயனர்களே அதிகம் நன்மையடைவார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. ■

AP PHOTO / FABIAN BIMMER



**Windows Vista, Microsoft Office 2007 ஆகிய மென்பொருள்களை விமர்சையாக வெளியிட்ட மாத்திரத்தில் Microsoft இற்கு தலையிடிக்கு மேல் தலையிடிகள் உருவாகியுள்ளன.**

# Microsoft க்கு தலையிடி!

*உதய தாரகை*

ஜனவரி 30 ஆம் திகதி உலகளவில் மிகவும் விமர்சையாக, விழாக்கள் வைத்து, Windows Vista, மற்றும் Office 2007 ஆகிய மென்பொருள் தொகுதிகளை Microsoft நிறுவனம் வெளியிட்டது.


Windows Vista வில் பல சிறப்பம்சங்கள் காணப்படுவதையும், அவை பற்றிய விபரங்களையும் கடந்த மாத இதழில் விரிவாகத் தந்திருந்தோம். அவற்றில் Speech Recognition (பேச்சு அறிகை) பண்பு சிறப்பானதாகும். இதன்மூலம் எமது பேச்சுகளைக் கேட்டு அதன்மூலம் கணினியில் கருமங்களை ஆற்றும் வாய்ப்பு சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பான பண்பே Windows Vista வைக் கதிகலங்கடிக்கும் தலையிடியைத் தோற்றுவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இணையத்தின் மூலம் பரிமாறப்படும் Mp3 கோப்புகள், மின்னஞ்சலில் பரிமாறப்படும் ஒலிக்கோப்புகள் ஆகிய வற்றின் மூலம் delete என்ற வார்த்தை பரிமாற்றப்பட்டால், எமது பேச்சுக்களைக் கேட்டுக் கருமமாற்றும் Vista குறித்த File ஐ மறுபேச்சில்லாமல் அழித்துவிடும். இந்நிலை "தொழில்நுட்ப ரீதியில்" சாத்தியமானது என Microsoft அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனாலும், Speech recognition பண்பானது, Activate ஆக்கப்பட்டு, ஒலிவாங்கி, (Microphone) ஒலி பெருக்கி (Speakers) என்பன பொருத்தப்பட்டு செயல்படுத்தப்படும் போதே இந்த நிலை ஏற்படுமெனச் சொல்லப்படுகின்றது.

சில Vista பயனர்கள் இதனைப் பரிசோதனையாகச் செய்து பார்த்துள்ளதோடு, அவை சிறப்பாக வேலை செய்வதாகவும் இதனால் அழிக்கப்பட்ட File களைத் திரும்பப் பெற முடியாத நிலை உண்டாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

Copy, delete, shut down போன்ற கட்டளைகளை ஒலி வாங்கி மூலம் பெறும் Vista நிறுவப்பட்டுள்ள கணினி, அக்கட்டளையைக் கச்சிதமாக நிறைவேற்றும் தகவுடையது என Microsoft இன் உத்தியோகபூர்வ வலைப்பதிவில் Microsoft பாதுகாப்பு ஆய்வாளரொருவர் பதிவிட்டுள்ளார்.

Speech recognition பண்பானது, Windows XP இலும் காணப்பட்டபோதும்,



பேச்சு: குரல் அறிகை விஸ்டாவில் உள்ள இடைமுகம்

TOP : AP PHOTO / VADIM GHIRDA



கட்டளை: Microsoft க்கு எதிராக தண்டப்பணம் விதிக்கும் ஐரோப்பிய ஒன்றியம்

Windows Vista விலே இது மிக விசாலமாக் கப்பட்டு, பாவனைகளுக்கு விடப்பட்டுள்ளது. இந்த Vista வில் தோன்றியுள்ள பிழையை நிவர்த்திக்க பயனர்களிடமிருந்து வரும் முறைப்பாடுகள், அறிக்கைகள் என்பவற்றை மிக அவதானமாக கருத்திற் கொண்டு நகர்வுகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும், இப் பிழை தொடர்பாக அதிகம் வருத்தப்படத் தேவையில்லையென Microsoft தனது பாவனையாளருக்கு அறிவுறுத்துகின்றது.

பேச்சு அறிகையில்தான் பிழையென்றிருக்க, இணையத்தோடு இணைக்கும் தன்மைகளையும் Vista கையாளுவதற்கு தவறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இணையப் பக்கங்களூடாக சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் பல பயனர்கள், குறித்த சில இணையப் பக்கங்களுக்குச் சென்று தமது கணக்குகளை பராமரிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. Virgin Media கணக்குகளை, Vista நிறுவப்பட்டுள்ள கணினியிலிருந்து இணைத்துக்கொள்ள முடியாதிருப்பதாக பல பயனர்களும் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். ஆனாலும், broadband இணைப்புள்ள இணைய வசதியில் மட்டும் குறித்த பக்கங்களில் இணைப்பை ஏற்படுத்த வாய்ப்பேற்பட்டுள்ளதென சில பயனர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய கணினிகளைக் கொள்வனவு செய்து, அதில் Windows Vista ஐ நிறுவியுள்ள பயனர்கள், இணையத் தொடர்பை ஏற்படுத்தும் வசதியை இழந்துள்ளதாக புள்ளிவிபரமொன்று தெரிவிக்கின்றது.


புதியதாகப் பல மேம்படுத்தப்பட்ட நிலைகளைக் கொண்டு உருவாக்கம் பெற்று பயனர்களின் பாவனைக்கு விடப்பட்ட Vista ஆனது, பயனர்களுக்கு இவ்வாறு வெவ்வேறு விடயங்களில் தலையிடி கொடுக்கும் அதேவேளை, இந்நிலைகள் Microsoft இற்கும் தலையிடியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

இவ்வளவும் மட்டுந்தானா என எண்ணியிருக்க, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாய், ஐரோப்பிய ஒன்றியம் Microsoft இற்கு எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது. Anti-trust சட்டத்திற்கு அமைவாக 2004 ஆம் ஆண்டு 497 மில்லியன் யூரோக்களை தண்டப்பணமாக Microsoft செலுத்த வேண்டுமென அதற்கெதிரான வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தண்டப் பணத்தை கட்டத் தவறும் பட்சத்தில் மேலதிகத் தண்டப் பணத்தையும் கட்ட வேண்டியேற்படுமென்று Microsoft ஐ ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.


"Anti – trust சட்டம் உருவாக்கப்பட்டு 50 வருடங்களில், குறித்த சட்டத் தீர்ப்பை நிறைவேற்றாத கம்பனியை முதல் தடவையாகவே காண்கிறோம்" என ஒன்றியத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

புதிதாகத் தண்டப் பணம் விதித்ததிற்கும் அப்பால், Windows Media Player இல்லாத Windows பணிசெயல்முறைமை பதிப்பொன்றை உருவாக்கும்படி, Microsoft க்கு, ஐரோப்பிய ஒன்றியம் ஆணையிட்டுள்ளது. 2004 இல் வழங்கப்பட்ட தீர்ப்பை முறையாக எடுத்து நடக்காத படியால், தாமதாகும் ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகத் தண்டப்பணம் கட்டவேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மட்டும் இவ்வாறு மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட தண்டப் பணம் 280.5 மில்லியன் யூரோக்களாகும்.

மழை, வெயில் மாறி மாறி வருவது போல் Microsoft இன் நகர்விலும் இன்பம், துன்பம் என்பன மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், மழையும், வெயிலும் ஒன்று சேருகையில் வானவில் எனும் வர்ண ஜாலம் உருவாவதுபோல, பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றுக்கான தீர்வுகள் மூலம் இன்னும் புதிய பல அற்புதங்களை தகவல் தொழில்நுட்பத் துறையில் நாம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ■



முடியவில்லை: Windows Vista மூலம் சில இணையத்தளங்களை தரிசிக்க முடிவதில்லை.




தலையிடி: இத்தனை பிரச்சினைகள் உண்டாகுகையில் தலையிடி வராமலா இருக்கும்?

TOP : AP PHOTO / DENNIS COOK
BOTTOM LEFT: AP PHOTO / GREG BAKER BOTTOM RIGHT : AP PHOTO / REMY DE LA MAUVINIERE

PC TIMES

# கணினிக் கல்லூரி

கணினிப் பாட இணைப்பிதழ் ■ ஏப்ரல் 2007




AFP PHOTO/NOAH SEELAM


12 Ms Word
14 Ms Excel
16 ICT for Grade 10 & 11
18 Photoshop
20 GIT
22 Java
24 Help Desk

ஆவணங்களை இலகுவில் மிக நேர்த்தியாக வடிவமைப்பதற்கு உதவும் மென்பொருள் இதுவாகும். இதன் மூலம் சிறு கடிதம் முதல் தொட்டு பெரிய நூல்களைக் கூடத் தயார் செய்ய முடியும். கணினியைப் பயன்படுத்தும் சகலரும் அறிந்திருக்கவேண்டிய மென்பொருள் இதுவாகும்.

Microsoft Office
**Word**

# INSERT WORDART


தாரிக்

கடந்த இதழில் Insert menu இல் காணப்படும் Picture எனும் தெரிவைப் பயன்படுத்தி, ஆவணமொன்றிற்கும் படங்களைச் சேர்ப்பதையும், சேர்த்த படங்களில் எமக்குத் தேவையான தொகுப்புகளைச் செய்வது எவ்வாறென்பதையும் பார்த்திருந்தோம். இம்முறை Insert menu விலுள்ள Picture தெரிவை சுட்ட வரும் Sub menu வில் தோன்றும் WordArt எனும் தெரிவை எவ்வாறு பயன்படுத்துவதெனப் பார்ப்போம்.

Ms Word இல் உருவாக்கும் ஆவணங்களில், அழகிய வடிவமைப்புகளை உடைய எழுத்துக்களை வழங்க உதவும் மென்கருவியாக WordArt ஐக் காணலாம். Insert → Picture → Word Art எனும் வகையில் (படம் -01) தெரிவை ஏற்படுத்தி, WordArt Gallery எனும் Dialog box ஐப் பெற்றுக் கொள்ளலாம். Drawing Tool bar இல் காணப்படும் முப்பரிமாண A எழுத்துருவான Button ஐக் கிளிக் செய்வதன் மூலமும் Word Art Gallery Dialog box ஐப் பெற்றுக் கொள்ளலாம் (படம் -02). பொதுவாக திரையின் அடிப்பகுதியில் Drawing Tool bar அமைந்திருக்கும். அவ்வாறு காணப்படாவிட்டால், View → Tool bars → Drawing எனும் வழியாக தெரிவை ஏற்படுத்தி, Drawing Tool bar ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

WordArt Gallery எனும் தலைப்பிலமைந்த Dialog box இல் வெவ்வேறு வடிவமைப்புகளில் அமைந்த பல வடிவமைப்பு மாதிரிகள் காணப்படும். அவற்றில் நாம் விரும்பிய வடிவமைப்பை Select செய்து, OK செய்யவேண்டும். இதன்போது, Edit Word Art Text எனும் தலைப்பிலமைந்த Dialog box காட்சியாகும் (படம்-03). இந்த Dialog box இல் Your Text Here எனும் வசனம் கொடா நிலையில் (Default) காணப்படும். எமக்கு விரும்பிய வசனங்களை / சொற்களை/ எழுத்துக்களை Type செய்யலாம். அத்தோடு Type செய்யப்பட்ட எழுத்தகளுக்கு பொருத்தமான Font மற்றும் அதன் அளவு என்பவற்றை மாற்றக்கூடிய வசதியும் அந்த Dialog box இல் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது குறித்த எழுத்துக்களை Bold, Italic, Underline போன்ற நிலைகளுக்கு மாற்றுவதற்கும் இங்கு வசதிகள் உள்ளது. இவ்வாறு எமக்குப் பொருத்தமான வகையில் Type செய்த எழுத்துக்களுக்கு, தெரிவுகளை வழங்கி OK செய்யவேண்டும்.

பின்னர், நாம் Type செய்த எழுத்துக்கள், நாம் விரும்பிய கோலத்தில் Document இல் காட்சியாகும். அத்தோடு WordArt எனும் தலைப்பில் அமைந்த Toolbar ஒன்றும் கூடவே திரையில் தோன்றும் (படம் -04). இந்த tool bar இன் மூலம் நாம் விளைவாகப் பெற்றுள்ள WordArt இல் பல தொகுப்புக்களைச் செய்ய முடியும். அவற்றை ஒவ்வொன்றாக இப்போது அறிந்து கொள்வோம்.





படம் - 01




படம் - 02



படம் - 03




படம் - 04

① என்ற New Tool ஐப் பயன்படுத்தி, Document இல் புதிதாக WordArt ஒன்றைச் சேர்க்க முடியும். ஏற்கனவே நாம் பார்த்த இரு முறைகளை விடுத்து, இவ்வழியாலும் WordArt Gallery ஐப் பெற்றுக் கொள்ளலாம்.


② என்று குறிப்பிடப்பட்டுள்ள Edit Text எனும் Tool ஐப் பயன்படுத்தி, நாம் உருவாக்கிய WordArt இலுள்ள எழுத்துக்களை தொகுக்க முடியும். இங்கு Edit WordArt Text Dialog box காட்சியாகும்.

③ என்ற WordArt Gallery Tool மூலம் நாம் தயார்செய்துள்ள WordArt இற்கு கொடுத்த வடிவமைப்பை மாற்றலாம். இங்கு WordArt Gallery எனும் Dialog box தோன்றுவதோடு எமக்குத் தேவையான வடிவமைப்பை இதிலிருந்து தெரிவு செய்யலாம்.

④ என்று இனங்காணப்பட்டுள்ள Format WordArt எனும் Tool ஐப் பயன்படுத்தி, WordArt இன் நிறம், கோடு போன்றவற்றில் மாற்றங்கள் செய்யலாம். வெவ்வேறு வகையான நிழற்படங்களையும் WordArt இன் நிறத்திற்குப் பதிலாக பிரதியிடும் வசதியும் இங்குண்டு.



⑤ ஆகிய WordArt Shape எனும் Tool ஐப் பயன்படுத்தி, நாமுருவாக்கிய எழுத்துக்களை எமக்கு விரும்பிய வெவ்வேறு Shape களில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். இங்கு பல்வேறு பட்ட வகையிலமைந்த வடிவ மாதிரிகள் தெரிவுக்காக காணப்படுகின்றன.




⑥ என்றுள்ள Text Wrapping Tool மூலம் எமது WordArt ஐ அடிப்படையாகக் கொண்டு Type செய்யப்படும். Text கள் ஆவணத்தில் எந்த முறையில் காணப்படவேண்டுமென்பதைத் தெரிவு செய்யலாம்.

⑦ என்ற இலக்கத்தால் WordArt Same letter height எனும் Tool குறித்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த Tool மூலம் WordArt இலுள்ள எழுத்துக்களை ஒரே அளவாக மாற்றி அமைத்துவிட முடியும்.

⑧ என்று குறிக்கப்பட்டுள்ள WordArt Vertical Text என்ற Tool மூலம், எழுத்துக்களை நிலைக்குத்தாக மாற்றியமைக்க முடியும்.




WordArt Alignment என்ற Tool ஆனது ⑨ என்ற எண்ணால் குறிக்கப்பட்டுள்ளது. இந்த Tool ஐப் பயன்படுத்தி WordArt இலுள்ள Text ஐ Center அல்லது Right அல்லது left Alignment செய்ய முடியும்.

அத்தோடு, ⑩ என்ற எண்ணால் சுட்டப்பட்டுள்ள WordArt Character Spacing எனும் Tool மூலம், WordArt இல் தோன்றும் எழுத்துக்களுக்கு இடைப்பட்ட தூரத்தை மாற்றியமைக்க முடியும்.

இவ்வாறாக, WordArt ஐ உருவாக்கி, உருவாக்கப்பட்ட WordArt வடிவமைப்பில் நாம் விரும்பிய வடிவத்தைப் பெற்றுக்கொள்ளும் வரைக்கும் மாற்றங்களைச் செய்து, நேர்த்தியான WordArt ஐ உருவாக்கலாம். நீங்களும் உருவாக்கித்தான் பாருங்களேன்! ■

## உலக செல்வ யோகம்



உலகளவில் 2007 ஆம் ஆண்டு பில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களுக்கு சொந்தமான செல்வந்தர்களை Forbes சஞ்சிகை பட்டியற்படுத்தியுள்ளது. இந்த ஆண்டில் 946 billionaires இருக்கின்றார்கள். "மனித வரலாற்றில் உயர்ந்த செல்வந்த ஆண்டு" இதுவாகும்.

### என்றும் முதலிடம்..



பெயர்: William Gates III
வயது: 51
அதிர்ஷ்டம்: சுயமான முயற்சி, ஆர்வம்
மூலம்: Microsoft நிறுவனம்
விவாக நிலை: திருமணமானவர், 3 குழந்தைகள்
கல்வி: ஹாவார்ட் பல்கலைக்கழகம்
சொத்து: 56 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

### TOP TEN BILLIONAIRES

| பணக்காரர் பெயர் | சொத்து பெறுமானம் | நாடு |
|---|---|---|
| 01. Bill Gates | US$ 56 billion | USA |
| 02. Warren Buffett | US$ 52 billion | USA |
| 03. Carlous Slim Helu | US$ 49 billion | Mexico |
| 04. Ingvar Kamprad | US$ 33 billion | Sweden |
| 05. Lakshmi Mittal | US$ 32 billion | India |
| 06. Sheldon Adelson | US$ 26.5 billion | USA |
| 07. Bernard Arnault | US$ 26 billion | France |
| 08 Amancio Ortega | US$ 24 billion | Spain |
| 09. Li Ka-shing | US$ 23 billion | Hong Kong |
| 10. David Thomson | US$ 22 billion | Canada |

Source: Forbes.com | Internet

Graphics/Tharique Azeez

கணித்தல் தொடர்பில் அதிகம் பிரசித்தமான மென்பொருள் இதுவாகும். இந்த மென்பொருளை உபயோகித்தே அநேகமான வரவுசெலவுகள் பதிவுசெய்யப்படுகின்றன. இதன் செயற்பாடுகளை அறிந்திருப்பதன் மூலம் திட்டமான வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொள்ளலாம்.

Microsoft Office
**Excel**

# Excel மூலம் இணையப்பக்கம் உருவாக்குதல்

*தாரிக்*

எண்களை ஒழுங்கமைத்து, பொருத்தமான விபரங்களை வழங்கக்கூடிய தகவல்களாக மாற்றும் பொறிமுறையில் Ms Excel போன்ற மென்பொருள்கள் ஆற்றும் பங்கு அளப்பரியது. நாமுருவாக்கும் கணக்கறிக்கைகளின் எண்களின் அட்டவணைப்படுத்தப்பட்ட வடிவம், எண்களின் கணித்தல்கள் என்பவற்றையெல்லாம் இலகுவில் ஆற்றுவதை Ms Excel சாத்தியமாக்கும்.


இந்த வசதிகளோடு கூடவே அட்டவணைப்படுத்தப்பட்ட எண்களை அவை கணிக்கப் பட்ட முறைகளோடு, திரையில் அவை தோன்றுவது போலவே இணையப்பக்கமாக வடிவமைக்கும் வசதியை Ms Excel தருகிறது. அத்தோடு நாமுருவாக்கிய Work Sheet இல் ஏதாவது images பாவிக்கப்பட்டிருந்தாலும், அவற்றையும் இணையப்பக்கத்திற்கேற்ப வேறு Folder ஒன்றினுள் சேமித்து, Link ஐயும் தன்னியக்கமாகவே ஏற்படுத்தும் தன்மையையும் Ms Excel கொண்டிருக்கும்.

இனி, எவ்வாறு Excel இல் இணையப்பக்கத்தை உருவாக்குவதென ஆராய்வோம். முதலில் Worksheet இல் இணையப்பக்கத்தில் வரவேண்டிய அனைத்தையும் Excel Worksheet இல் Type செய்து, ஒழுங்கமைத்து பின்னர், File Menu இல் Save as Web Page... என்ற தெரிவை Click செய்ய வேண்டும் (படம்-01). இதன்போது, Save as... எனும் தலைப்பில் அமைந்த Dialog box காட்சியாகும் (படம் - 02).

காட்சியாகும் குறித்த Dialog box இல் பல விருப்பத்தேர்வுகள் காணப்படும். அவற்றில் எமக்குப் பொருத்தமான தெரிவுகளை மேற்கொண்டு இணையப்பக்கத்தை உருவாக்க ஆரம்பிக்கலாம். தெரிவுகளின் தேவைகளைப் பற்றி ஆராய்வோம்.


Save என்ற பகுதியில், Entire Work book, மற்றும் Selection Sheet என்ற நிலைகள் காணப்படும். அவற்றில், மொத்த work book ஐயும் இணையப் பக்கமாக மாற்றவேண்டுமாயின் Entire Workbook எனும் தெரிவையும், Active ஆகக் காணப்படும் Worksheet ஐ மட்டும் இணையப் பக்கமாக மாற்ற எண்ணினால், Selection Sheet என்ற தெரிவையும் தேர்ந்தெடுக்கலாம்.

இந்தப்பகுதிக்கு அருகில், Add Interactivity எனும் தெரிவு காணப்படுகிறது. இந்தத் தெரிவை Select செய்தால், உருவாக்கப்படும் இணையத்தளமானது, Ms Excel இன் Internet Explorer இன் Extension இன் மூலமாக திறந்து காண்பிக்கப்படும். இது Internet Explorer இல் Ms Excel இன் வேலையை செய்வதைச் சாத்தியமாக்கும். ஆனாலும், குறித்த Internet Explorer இன் Extension நிறுவப்பட்டுள்ள கணினியிலேயே இவ்வாறு




படம் - 01

உருவாக்கப்படும் இணையத்தளங்கள் பொருத்தமான வகையில் காட்சிப்படுத்தப்படும். குறித்த Extension நிறுவப்படாமல் இருந்தாலும், அதனை தொடர்றா இணைப்பின் (Online) மூலமாக நிறுவிக் கொள்வதற்கான இணைப்பை தன்னியக்கமாகவே, இணையப் பக்கத்தில் காட்சிப்படுத்தும்.







மேற்சொன்ன விடயங்களை பொருத்தமான வகையில் தெரிவு செய்து, இணையப்பக்கத்திற்குரிய File Name ஐயும் வழங்கி, குறித்த பக்கம் Save ஆக வேண்டிய இடத்தையும் தெரிவு செய்து, Save என்ற Button ஐ கிளிக் செய்ய, இணையப்பக்கம் தயாராகிவிடும்.

நீங்கள் எண்களை, எழுத்தக்களை WorkSheet ஒன்றில் ஒழுங்கமைத்து அவற்றை இணையப்பக்கங்களாக மாற்றி, Internet Explorer, Mozilla Firefox போன்ற இணைய உலாவிகள் (Internet browsers) மூலம் பார்த்து பூரிப்படையலாமே! பயிற்சியும் பெறலாமே!

Change Title எனும் Button ஐ கிளிக் செய்து தோன்றும் Text box இல் (படம் - 03), இணையப் பக்கத்தில் வரவேண்டிய தலைப்பை வழங்கலாம். இவ்வாறு பிறிதொரு தலைப்பு வழங்கப்படா விட்டால், File இன் பெயரையே இணையத்தளத்தின் தலைப்பாக தன்னியக்கமாக Excel மாற்றிவிடும்.

## இணைய மின்னஞ்சல்

இணைய அடிப்படையான இலவச மின்னஞ்சல் வசதியை கணினிப் பயனர்களுக்கு வழங்குவதற்கு பல நிறுவனங்களும் முனைந்துள்ளன. அவற்றுள் Yahoo, msn Hotmail மற்றும் Gmail ஆகிய சேவைகள் மிகவும் பிரபல்யமானவை.

| | msn Hotmail | YAHOO! MAIL | Gmail |
|---|---|---|---|
| ஆரம்பித்த ஆண்டு | 1995 | 1997 | 2004 |
| கொள்ளளவு | 1 GB | 1 GB | 2.8 GB |
| உரிமையான நிறுவனம் | Microsoft | Yahoo! | Google |

தொலைத் தொடர்பாடலில் வினைத்திறனான தகவல் பரிமாற்றத்திற்கு வழியமைத்துள்ள புதிய தொழில்நுட்பமாக மின்னஞ்சல் சேவையை இனங்காணலாம்.



உலகளவில் வருகை தந்தோர்




கடந்த வருடம் 2006 இல், இணைய அடிப்படையான மின்னஞ்சல் சேவைகளை பயன்படுத்துவோர் குறித்த சேவைத் தளங்களுக்கு வருகை தந்த தடவைகளின் எண்ணிக்கை மில்லியனில் காட்டப்பட்டுள்ளது.

Source: Internet

Graphics/Tharique Azeez

### இங்கே... இங்கே...

இந்தியாவின் ஐதராபாத் நகரில் அங்காடி வியாபாரி ஒருவர் நாணயத்தில் இயங்கும் தொலைபேசி தொகுதிகளை தனது நடமாடும் வண்டியில் வைத்து வியாபாரத்திற்காக புறப்படும் காட்சி. 3800 இந்தியன் ரூபா பெறுமதியான இரண்டு பற்றிரிகளில் இயங்கும் இத் தொலைபேசித் தொகுதி Telematris எனும் கம்பனியினால் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ரூபாய் பெறுமதியான அழைப்பை ஏற்படுத்துகையில் இந்த வியாபாரி ஐம்பது சதவீதமான இலாபத்தை பெறுகிறார்.

AFP PHOTO / NOAH SEELAM

## Win Pen Drives



*கடந்த மாதம் இப்பகுதியில் கேட்கப்பட்ட கேள்விக்கான விடை*

- Serial Port - வெளியான மோடம்கள் மற்றும் பழைய கணினி சுட்டிகளை கணினிகளோடு இணைப்பதற்கே தொடர்நிலைத் துறை பயன்படுத்தப்படுகின்றது.
- Video Card Port - இந்த துறை மூலமே கணினியின் ஒளித்தோற்ற அட்டைக்கு காட்சித் திரைகள் இணைக்கப்படுகின்றன.
- Parallel Port - இவை வருடிகள் மற்றும் அச்சுப் பொறிகளை கணினியோடு இணைக்கவே இணைக்கப்படுகின்றன.
- PS/2 Port - கணினிக்கு விசைப்பலகை மற்றும் சுட்டியை இணைகக்கவே PS/2 துறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- USB Port - புற வன்தட்டு, அச்சுப்பொறி, சுட்டி, வருடி என விரியும் சகல புறச்சாதனங்களையும் கணினியுடன் இணைக்கப்படுகின்றது.
- Ethernet (Network) Port - கணினியொன்றினை இணையத்திற்கு அல்லது வலையமைப்பிற்கு இணைக்கும் பொருட்டு இந்தத்துறை பயன்படுத்தப்படும்.

*கடந்த மாத வெற்றியாளர்கள்*

| | | |
|---|---|---|
| F.K.F. முபிகா, கலகாமுல்ல, வெளிபன்னகஹமுல்ல. | S. ஜனந்தன், பாடசாலை வீதி, சமாலன்குலம், வவுனியா. | K. சண்முகநாதன், பாடசாலை வீதி, வீரமுனை-1, சம்மாந்துறை. |

*இம் மாத கேள்வி*

கணினி செயற்படுத்தப்படும் போது பிரதான நினைவகத்தில் நிலைப்படுத்தப்படும் பணிசெயல்முறைமையினால் (அதன் ஒரு பகுதியால்) பாவிக்கும் பயனர்கள் உணராமல் கணினி செய்யும் தொழிற்பாடுகள் ஐந்தை சுருக்கமாக தருக.

*பதில் அனுப்பவேண்டிய முகவரி*

Win Pen Drives, PC TIMES Magazine, Wijeya Newspapers Ltd.
No. 08, Hunupitiya Cross Road, Colombo – 02.

*விடைகளை தபால் அட்டையில் மாத்திரமே எழுதி ஏப்ரல் 23 க்கு முதல் அனுப்பி வைக்கவும்*




மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பொதுவான அறிவை வழங்குவதற்கும், பிற்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் மேல்படிப்புகளை மேற்கொள்வதற்கான அடித்தளத்தை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டு, 2007 ஆம் ஆண்டின் புதிய கல்விச் சீர்திருத்தம் மூலமாக கல்வி பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரத்தில் ஒரு பாடமாக ICT (Information Communication Technology) எனும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை அறிமுகம் செய்துள்ளது. தரம், 10 மற்றும் 11 இல் கற்பிக்கப்படவுள்ள இப்பாடத்திட்டமானது ஒன்றோடொன்று தொடர்புடைய தகவல் தொழில்நுட்பம் சார்பான பாட அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்
# Information Communication Technology
## தரம் 10 மற்றும் 11

*ZEEZAT*

இப்பாடத்தின் மதிப்பீட்டு நிலைகள் பாடசாலை மற்றும் தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள்ளது. பாடசாலைகளில் பரீட்சைத் திணைக் களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய பாட சாலை மட்ட (School based assessment) நடாத்தப்படும். தேசிய மட்ட மதிப்பீடு. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையின் போது பரீட்சையாக நடாத்தப்படும்.

தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் பரீட்சை வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் என்பவையே அவையாகும். பல்தேர்வு வினாக்களில் 40 கேள்விகள் இருப்பதோடு, அக் கேள்விகளுக்கு ஒரு மணித்தியாலத்தில் விடையளிக்க வேண்டும். கட்டமைப்பு வினாப்பத்திரம் இரண்டு மணித்தியால நேரத்தைக் கொண்டுள்ளது. வினாத்தாளி லுள்ள 10 வினாக்களில் மாணவர். 8 வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

பல்தேர்வு வினாத்தாளுக்கு 40 புள்ளிகளும், கட்டமைப்பு வினாத்தாளுக்கு 60 புள்ளிகளும் வழங்கப்படும்.

இந்தப்பரீட்சையில் சித்தியெய்த. மாணவர்கள் இறுதியாக செய்யும் செயற்றிட்டத்தில் (project) போதிய சித்தி மதிப்பெண்களைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

மேற்படி பாடத்திட்டத்திலுள்ள அலகு 1 ஆனது ஏற்கனவே. தமிழ் PCTIMES இல் வெளியாகிக் கொண்டிருக்கும் GIT- (பொதுத் தகவல் தொழில்நுட்பவியல்) பாடத்தொடரில் ஆராயப்பட்டுள்ளது. அத்தோடு GIT மற்றும் ICT ஆகிய இரு பாடத்திங்களுக்கும் பொதுவான சில அலகுகளும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இதுவரை ஆராயப்படாத ICT பாடத் திட்டத்திலுள்ள விடயங்களை எதிர்வரும் மாத இதழிலிருந்து தொடராக தமிழ் PC TIMES வாசகர்களுக்கு இப்பகுதியூடாக வழங்க எண்ணியுள்ளோம். ■



## புதிய தொடர் ஆரம்பமாகிறது

விடயதானமும், நேர ஒதுக்கீடும் பின்வருமாறு அமைகிறது.

| Unit | Topic | Proposed No.of Periods | |
|---|---|---|---|
| | | Practical | Theory |
| 1. | Fundamentals of ICT | 6 | 4 |
| 2. | Computer architecture and Operating system | 7 | 8 |
| 3. | Generic Software | 35 | 5 |
| 4. | Modern day ICT applications | 3 | 12 |
| 5. | System analysis and design | 0 | 30 |
| 6. | Computer Programming | 40 | 20 |
| 7. | Internet & Website Development | 30 | 10 |
| 8. | It & Society | 0 | 15 |
| 9. | Student Project | 0 | 15 |

*(A Period consists of 40 minutes)*



## சீனாவில் DELL இன் புதிய பரிமாணம்

DELL நிறுவனத்தின் சீனாவின் வடிமைப்பு மையத்தின் பொறியியலாளர்கள் குறைந்த விலையை உடைய மிகவும் வினைத்திறனான கணினியை உருவாக்கியுள்ளனர். இக்குறைந்த விலை கணினியானது சீனாவின் கணினி பற்றிய அறிவில்லாதவர் களைக்கூட இணையத்துடன் இணைக்கும் முயற்சியின் பாலமாக அமையவிருக்கிறது.


சீனாவின் சங்காயில் உள்ள வடிவமைப்பு நிலையத்தில் வைத்து EC250 எனும் குறைந்த விலைக்கணினி DELL கணினி நிறுவனத் தின் நிறைவேற்று அதிகாரி மைக்கல் டெல்லினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அறிமுகம் செய்த போது எடுக்கப்பட்ட படமே அருகில் உள்ளதாகும்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இக் கணினி 2599 மற்றும் 3999 யுவான்கள் (335 மற்றும் 515 அமெரிக்க டொலர்கள்) விலையில் விற்கப்படவுள்ளது. இக் கணினிக்கு சீனா மக்களிடையே அதிக வரவேற்பு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ■

AFP PHOTO / NOAH SEELAM

## நோய்களை அறியக்கூடிய Chip

சிங்கப்பூரின் பல்தொழில்நுட்பக் கழகத்தால் உருவாக்கம்பெற்ற Chip யே படத்தில் காண்கிறீர்கள். குருதிமாதிரிகளில் இருந்து டெங்கு, மலேரியா, எயிட்ஸ் நோய்களுக்கான நோய்கிருமிகளை கண்டறியக்கூடிய தகவை இந்தச் Chip கொண்டுள்ளது. இதனை நீரின் தூய்மைத் தன்மையை துணியவும் பயன்படுத்தமுடியும்.



AFP PHOTO / ROSLAM RAHMAN


# ALL BRIGHT COLLEGE

We Lead you to a Better Future...!!

**Business Administration (ABE - UK)**

Diploma in Hardware Engineering

Computer Courses
- Diploma in Desktop Publishing
- Diploma in MS Office
- Visual Basic 6.0
- Web Designing
- 3D Studio Max
- Multimedia
- Auto Cad
- Maya

MCSE ↑ MCSA ↑ MCP (Microsoft Certified System Engineer)

English Language
Genaral English,BEC,IELTS
CAE,CPE,KET,PET,FCE
cambridge exams uk

Hand Phone Repairing
Duration : Week Days: 1 month
Week End : 2 months

Electronic Engineering
4 month (Certificate)
6 months (Diploma)

- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்
- தவனை அடிப்படையில் கட்டணங்களைச் செலுத்த முடியும்
- இலகுவாக தொழில் வாய்ப்பைப் பெறமுடியும்
- வாரநாட்கள் மற்றும் வாரஇறுதி நாட்களில் வகுப்புகள் நடைபெறும்
- ஆய்வுகூட வசதியும் உண்டு
- கூடுதலான பயிற்சிக்கான வசதி
- நியாயமான கட்டணம்

KANDY
99/1, D.S.Senanayake Veediya,Kandy
Tel : 081-2202959,081-5671255
E-mail : info@allbrightcollege.com

KEGALLE NDS (All Bright College)
156,main Street,Kegalle.
Tel : 035-4925192
Web : allbrightcollege.com

நிழற்படங்களில் எண்ணிலடங்கா மாற்றங்களைச் செய்து நேர்த்தியான நிழற்படங்களை வருவிளைவாகப் பெற்றுக்கொள்ள பொருத்தமான மென்பொருள் இதுவாகும். இதில் காணப்படுகின்ற மென்கருவிகளை உபயோகித்து எமது சிந்தனைக்கு எட்டுவதையெல்லாம் செதுக்கி விடலாம்.

Adobe Photoshop

# வானவில் காட்சி - RAINBOW EFFECTS

*M.I.M. நப்லி*


இவ்விதழில் நாம் Photoshop இனது பல புதுமைகளில் ஒன்றான Rainbow Effect இனை ஆராய்வோம். அதாவது உங்களது நிழற் படத்தில் வானவில் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்குவது எவ்வாறு என்பதை கற்போம்.




Gradian எனும் Tool இனைப் பயன்படுத்திச் செய்யும் புதுமைகளில் இதுவும் ஒன்று. முதலில் Rainbow effect உற்படுத்த விரும்பும் Image இனை Open செய்து கொள்ளுங்கள். பின்பு புதிய ஒரு Layer இனை Add செய்து கொள்ளுங்கள். Toolbox இல் உள்ள Gradian Tool இனை தெரிவு செய்து கொள்ளுங்கள்.





மேலே உள்ள படி முறைகளை செய்வதனால் கிடைக்கும் Dialog Box இல் பின்வரும் படிமுறைகளை மேற்கொள்ளுங்கள்.





அடுத்த படிமுறையாக கீழே கானப்படும் உருவில் காட்டப்பட்டுள்ள படிமுறைகளை மேற்கொள்ளுங்கள்.







மேலே குறிப்பிட்டுள்ளவாறு படிமுறைகளை செவ்வனே செய்வதன் மூலம் கீழே காட்டப்பட்டுள்ளதைப் போன்று உங்கள் நிழற்படம் மாறுவதை அவதானிக்களாம்.




வானவில்லின் தோற்றத்தை செம்மை யாக மாற்றுவதற்காக கீழ் வரும் படிமுறைகளை மேற்கொள்ளுங்கள்.




நீங்களும் உங்கள் நிழற் படங்களுக்கு Rainbow Effect இனை வழங்கலாமே.



# வேகமாக நிழற்படப் பதிப்பு



ஜப்பானின் இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் மிகப் பிரசித்தமான Sony நிறுவனம் அண்மையில் டிஜிடல் நிழற்பட அச்சுப்பொறியை வெளியிட்டது. இச் சாதனமானது "Picture Station DPP-FP 90" எனும் பெயரால் இனங்காணப்படுகின்றது. இச்சாதனம் 3.6 அங்குல LCD திரையை கொண்டுள்ளதோடு அடிப்படையான சில நிழற்படத்தொகுப்புக்குரிய மென்கருவிகளையும் தன்னகம் கொண்டுள்ளது. அத்தோடு இது தபால் அட்டை அளவான நிழற்படங்களை மிக தரமாக அச்சுப்பதிக்கும் திறன் கொண்டது. இதன் விலை ஜப்பானின் 25,000 ஜென்களாகும்.





நவீன தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான அறிவை மாண வர்களுக்கு வழங்கும் பொருட்டு பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடவிதானமே இதுவாகும். இப் பாடவிதானத்தில் உள்ள விடயங்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் பிரயோசனமானதாகும்.

GIT

# பொதுத் தகவல் தொழில்நுட்பவியல்
# General Information Technology

*Tharique*

கடந்த மாத இதழ்களில் கணினியின் வன்பொருள்கள் பற்றியும் அவையாற்றும் தொழிற்பாடுகள் பற்றியும் விரி வாக ஆராய்ந்தோம். இம்முறை கணினியின் பல தொழிற்பாடு களை மேற்கொள்வதற்குத் துணை புரியும் மென்பொருள்கள் (Softwares) பற்றி ஆராய்வோம்.

## Device Drivers
### சாதனச் செலுத்துவான்

- Virtually every hardware component located inside or connected externally to a computer requires associated software component to enable that hardware to communicate and function with the operating system, other applications and other hardware components of the computer.
- கணினியினுள் அல்லது வெளியில் கணினியோடு மெய்நிகராக இணைக்கப்பட்ட வன்பொருள்கள் பொருத்தமான வகையில் இயங்குவதற்கு, அவ்வன்பொருள்களை பணிசெயல் முறைமை மற்றும் ஏனைய செய்நிரல்களுடன் ஒத்திசைவாக் கும் மென்பொருள்கள் தேவைப்படும்.
- This software component is referred to as driver software of that hardware component. Until you install the proper software derive for a hardware component that hardware component remains logically isolated from the rest of the components of the computer.
- இவ்வகை மென்பொருள்கள், குறித்த வன்பொருள்களின் செலுத்துவான் மென்பொருள்களாக இனங்காணப்படுகிறது. வன்பொருளுக்கு பொருத்தமான செலுத்துவான் மென் பொருள்களை கணினியில் நிறுவுமட்டும், குறித்த வன் பொருள்கள் இயக்கமின்றியே காணப்படும்.

## Software
### மென்பொருள்

- Software refers to instructions which are used by the computer to perform various tasks. The word programme is synonymous with software. Software is created with programming languages and related utilities. Software is generally classified into two types:

  1. System software
  2. Application software.

- கணினிக்கு பல்வேறு தொழிற்பாடுகளைச் செய்யும் பொருட்டு வழங்கப்படும் அறிவுறுத்தல்களே மென்பொருள் எனப்படுகிறது. செய்நிரல் என்பது மென்பொருள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லாகும். மென்பொருள்கள், செய்நிரலாக்க மொழி மற்றும் இதர துணை மென்கருவிகளின் உதவியுடன் உருவாக்கப்படும். மென்பொருள்கள் பொதுவாக இரண்டு பிரதான பகுதிகளாக வகைப்படுத்தப்படும். அவையாவன:

  1. முறைமை மென்பொருள்
  2. பிரயோக மென்பொருள்.

## System Software
### முறைமை மென்பொருள்

- System software is responsible for controlling, integrating and managing the individual hardware components of a computer system so that other software and the users of the system see it as a functional unit without having to be concerned with the low-level details of the computer hardware.
- கணினியொன்றின் வன்பொருள்களை கட்டுப்படுத்தி, தொடர்பாக்கி அவற்றை முகாமை செய்யும் பொறுப்பு முறைமை மென்பொருளையே சாரும். இதனால் வன்பொருள் பற்றிய தெளிவான அறிவில்லாமலேயே ஏனைய மென்பொருள்களும், பயனர்களும், கணினித் தொழிற்பாட்டின் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வர்.

System software can be further classified as:

1. Operating Systems
2. Utilities and Service Programs

முறைமை மென்பொருள் மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

1. பணிசெயல் முறைமை
2. பயன்பாடு மற்றும் சேவை செய்நிரல்கள்.

## Operating Systems (OS)
### பணிசெயல் முறைமை

- The Operating System manages the resources and the basic operations of the computer.
- கணினியொன்றின் அடிப்படைத் தொழிற்பாடு மற்றும் மூலங்களை முகாமிக்கும் தொழிலை பணிசெயல் முறைமை செய்கின்றது.

- Without an operating system the computer would not work.
- பணிசெயல் முறைமை இல்லாமல் கணினி இயங்காது.
- The operating system (or a part of it) is loaded into the main memory when the computer is switched on and handles many tasks, which we are unaware of when we use the computer.
- கணினி செயற்படுத்தப்படும்போது, பணிசெயல் முறைமை (அல்லது அதனொரு பகுதி) கணினியின் பிரதான நினைவகத்தில் நிலைப்படுத்தப்பட்டு, பல தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. இத்தொழிற்பாடுகளை கணினியை பாவிக்கும் பயனர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

## Without an operating system the computer would not work



Linux பணிசெயல் முறைமையின் இடைமுகம்




Mac OS X பணிசெயல் முறைமையின் இடைமுகம்

- A part of the operating system remains in main memory until the computer is turned off.
- கணினியானது off செய்யப்படும் வரையிலும், பணிசெயல் முறைமையின் ஒரு பகுதி, கணினியின் பிரதான நினைவகத்தில் தேக்கி வைக்கப்படும்.
- There are several operating systems used with personal computers such as Windows 98, Windows XP, Linux and Mac OS. Different operating systems are designed for different hardware platforms or for different functions.
- கணினிகளோடு Windows 98, Windows XP, Linux, மற்றும் Mac Os போன்ற பல பணிசெயல் முறைமைகள் செயற்படுகின்றன. வெவ்வேறு வன்பொருள் நிலை மற்றும் தொழிற்பாடு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு, வெவ்வேறாக பணி செயல்முறைமைகள் உருவாக்கப்படுகின்றன.
- Operating systems may provide different types of user interfaces such as Command Line Interface and Graphical User Interface (GUI).
- கட்டளைத் தொடர் இடைமுகம் மற்றும் வரைவியல் பயனர் இடைமுகம் போன்ற வித்தியாசமான வகை இடைமுகங்களில் பணிசெயல் முறைமைகள் உருவாக்கப்படுகின்றன.
- In the command line interface, users communicate with the operating system by typing commands using the keyboard.
- கட்டளைத் தொடர் இடைமுகத்தில், விசைப்பலகையின் உதவியுடன் கட்டளைகளை தட்டச்சு செய்தே பயனர்கள் பணிசெயல் முறைமையோடு தொடர்பை ஏற்படுத்துகின்றனர்.
- One of the main disadvantages of the command line interface is that the user has to memorize the commands exactly.
- கட்டளைத் தொடர் இடைமுகத்தில் பணிகளைச் செய்ய, பயனர்கள் குறித்த கட்டளைகளை நினைவில் வைத்திருக்க வேண்டியது இந்த இடைமுகம் சார்பான பிரதிகூலமாகும்.
- The graphical user interface was first developed for Apple Macintosh Computers
- Apple Macintosh கணினிகளிலேயே முதன்முதலாக வரைவியல் பயனர் இடைமுகம் உருவாக்கப்பட்டது.
- In the graphical user interface, a user invokes a command by means of graphical objects shown on the screen and the system translates the user actions to the operating system commands and executes them on behalf of the user.
- இந்த இடைமுகத்தில் பயனர்கள், திரையில் காணப்படும் வரைபியல் கூறுகளை கிளிக் செய்வதன் மூலம் கட்டளைகளை வழங்குகின்றனர். கணினியானது, பயனர்களின் தெரிவுகளை, கட்டளைகளாக பரிவர்த்தனை செய்து கொள்கிறது.
- The general-purpose operating systems are typically supplied on CD-ROMs and must be installed before using the computer.
- பொதுவாக இறுவட்டுகளில் பணிசெயல்முறைமைகள் வழங்கப்படுவதோடு, இவை கணினியை பாவிப்பதற்கு முதலில் கணினியில் நிறுவப்பட வேண்டும்.

கணினியின் எல்லாத் தளமேடைகளிலும் இயங்கக்கூடிய வகையில் அமைந்த மென்பொருள்களை உருவாக்க மிகச் சிறந்த கணினிமொழி ஜாவா ஆகும். இம் மொழி தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல் கணினி, இணைய நிலைகளில் செயற்படக்கூடிய வினைத்திறனான மென்பொருள்களை உண்டாக்கும் திறனை வளர்க்கும்.

# கணினி மொழியின் அரசன் - JAVA

*M.L.M. இர்ஷாட்*




## Switch statements

தரப்பட்ட ஒரு பெறுதியின் மூலம் செய்நிரலின் பல பகுதிகளை இயக்கவேண்டியேற்படும் சந்தர்ப்பங்களில் switch statement பயன்படுத்தத முடியும்


```
switch (expresion)
{
 case1 :
     // statement
 case2 :
    // statement
 default :
   // statement
 }
```

```
import javax.swing.JOptionPane;
public class Sixth
{
        public static void main (String [] arg)
        {

                String value;
        value= JOptionPane.showInputDialog("Enter your No
1,2 or 3");
                int no= Integer.parseInt( value );
                //if(resultvalue>=75)
                switch (no)
                {
        case 1:     JOptionPane.showMessageDialog(null,"YO
U Entered No : 1");
        break ;
        case 2:
        JOptionPane.showMessageDialog(null,"YOU Entered
No :2 ");
                break;
                case 3:
JOptionPane.showMessageDialog(null,"YOU Entered No :3 ");
        break;
        default :
          JOptionPane.showMessageDialog(null,"YOU Entered
Wrong No : ");
                }
        }
}
```

## Break and continue

இந்த இரண்டு திறவுச்சொற்களும் (key words) செயற்பட்டுக்கொண்டிருக்கும் செய்நிரலின் பகுதியை நிறுத்த (break) அல்லது தொடரச்செய்ய (continue) பயன்படுகிறது. Continue statement ஆனது loop ஒன்றினுள் மாத்திரமே பயன்படுத்தமுடியும். break statement ஐ loop ஒன்றினுள்ளோ அல்லது switch statement னுள்ளோ பயன்படுத்த முடியும்



## Arrays

சில வேளைகளில் செய்நிரல்கள் இயங்கிக் கொண்டிருக்கும் போது (run time environment) தகவல்களை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ சேமிக்கவேண்டிய தேவையேற்படலாம். இதன்போது Arrays கள் பயன்படுத்தப்படுகின்றன.

Java arrays ஆனது முதன்மை தரவுகளின் (Primitives) அல்லது மற்றைய தரவுகளின் ஒழுங்காக்கப்பட்ட தொகுப்புக்களாகும். Array ஒன்றை அமைக்கும்போது மூன்று படிமுறைகளை பின்பற்றவேண்டும்.

முதலாவதாக, வரையறையொன்றை பிரகடனப்படுத்தல் (Declaration) Arrays ஆனது மூலகத்தின் வகையை வரையறுப்பதுடன் ஆரம்பமாகும். Array ஆனது object அல்லது primitives தரவு வகைகளை கொண்டிருக்கும். இது பின்வருமாறு வரையறுக்கப்படும்.

```
primitives
int [ ] count;
Object
JButton [ ] button;
```

மேற்காட்டப்பட்டுள்ள உதாரணங்களிலிருந்து array ஒன்றை வரையறுக்கும்போது முதலாவதாக தரவுவகையும் அதனைத்தொடர்ந்து அடைப்புக்குறியும் அடுத்ததாக மாறி ஒன்றும் இடம்பெறவேண்டியது அவசியமென்பது தெளிவாகிறது.


### இரண்டாவதாக array ஒன்றை நிர்மாணித்தல் (Constructing)

Array ஒன்றின் object களுக்குத் தேவையான இட ஒதுக்கீட்டை மேற்கொள்ளலானது array ஒன்றை நிர்மாணித்தலெனப்படும். அதாவது jvm மிற்கு தேவையான அளவு இடத்தை ஒதுக்குமாறு பெறுமானத்தின் மூலம் கூறுதலாகும். இதற்காக new எனும் Key word ஐ தொடர்ந்து வரும் array யினது வகையுடன் அடைப்புக் குறிக்குள் தேவையானவனவு பெறுமானத்தையிடவேண்டும்

அதாவது

```
int [ ] count = new int [10];
```

மேற்காட்டிய உதாரணத்தில் இட ஒதுக்கீடானது பின்வருமாறு அமையும்



(count[0]) (count[9])

Array ஆனது எப்போதும் முதலாவது கலத்தை (cell space) 0 ஆக எடுத்துக்கொள்வதுடன் அதன் அனைத்து மூலகங்களும் அதனது மூலப்பெறுமானத்தை (default value) பெற்றுக்கொள்ளும்.

### மூன்றாவதாக array ஒன்றை ஆரம்பித்தல்

Default value ற்கு மேலதிகமாக பெறுதியொன்றை ஏற்படுத்துதல் இப்பகுதியில் மேற்கொள்ளப்படும்.

```
int [ ] count = {1,2,3,4,5,6,7,8,9,10}
```

## Multi Dimensional Array

Multi Dimensional Array ஆனது சாதாரண array களின் தொகுதிகளைக் குறிக்கும். ஒவ்வொரு array யும் அடைப்புக்குறியினால் வேறாக்கப்படும்

உதாரணமாக

int [ ][ ] count=new int [4][3] → Two Dimensional Array

int [ ][ ][ ] count=new int [4][3] [2]→ Three Dimensional Array ■

## அறிந்து கொள்வோம்

Java bytecode

Java bytecode என்பது ஜாவா மெய்நிகர் கணினி (Java Virtual Machine) செயற்படுத்தும் அறிவுறுத்தல்களாகும். ஒவ்வொரு bytecode உம் ஒரு byte நீளத்தைக் கொண்டு காணப்படுகிறது. இதனாலேயே இது bytecode எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. bytecode கள் 256 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதும் 256 bytecode களின் பெறுமதிகளும் பாவிக்கப்படுவதில்லை.

Java Virtual Machine, ஜாவா கணினிமொழி மற்றும் இதர ஜாவா இயங்குதளத்தின் அசல் படைப்பாளியாகிய Sun Microsystem எனும் நிறுவனம் பயன்படுத்த முடியுமான bytecode களை வரையறுத்துவைத்துள்ளது.

bytecode கள் சுயமாக கணினி செய்நிரலாளரால் எழுதப்படலாம். ஆனாலும் இக் காலத்தில் Compilers எனப்படும் கணினி மொழிகளை தொகுக்கும் மென்பொருள்கள் அதிகளவில் புழக்கத்தில் இருப்பதால் bytecode களை உருவாக்குவது மிகவும் இலகுவானதாகும். உதாரணமாக GNU Compiler for Java எனும் மென்பொருளை குறிப்பிடலாம்.

-cz

நீங்கள் அன்றாடம் கணினியை பாவிக்கும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள், எழுகின்ற சந்தேகங்கள் போன்றவற்றிற்கு தெளிவான மற்றும் விளக்கமான பதில்கள் இப்பகுதியில் வழங்கப்படும். இங்குள்ள விடயங்கள் பலருக்குமுள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கும் என்பதில் ஐயமில்லை.

HELP DESK

# உங்கள் கேள்விகள் எங்கள் பதில்கள்

*பதிலளித்தவர்: த.தவரூபன்*

## கணினியை Assemble செய்தல்

**Q:** நாம் சுயமாகவே கணினியொன்றை **Assemble** செய்து எவ்வாறு செயல்படச் செய்வது? அதற்கு தேவையான பொருட்கள் எவையென்று குறிப்பிடவும்? **Format** செய்வது எவ்வாறு? விளக்கமாகவும் விபரமாகவும் குறிப்பிடவும்

*ஐ.மூ. ஹிஜாஸ், பொத்துவில்.*

**A:** உங்களிடம் ஏற்கனவே கணினி ஒன்று இல்லாதவிடத்து தற்போது புதிதாக ஒன்றை எப்படி பொருத்தி செயல்பட செய்வது என இங்கே தருகிறேன்

ஒரு கணினிக்குரிய முக்கிய உதிரிப்பாகங்களான Processor, Motherboard, Hard Disk, RAM, CD Rom, Floppy Drive, Monitor, Keyboard, Mouse, Power Supplier, Casing, Operating System CD, சில உபயோகமுள்ள Software CDகள். இவை உங்களிடம் இருக்குமெனின் நீங்களே உங்கள் கணினியை பொருத்தி செயல்படுத்த முடியும். எனினும் மேற்சொன்ன பொருட்களை வாங்கிக்கொள்ளமுன் இரு முக்கிய விடயங்களை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்

நீங்கள் எப்படியான தேவைக்கான கணினியை உருவாக்க போகின்றீர்கள்? எவ்வளவு பணத்தைச் செலவழிக்கத் தயாராக இருக்கின்றீர்கள்? என்ற கேள்விகளுக்கான தெளிவான பதில் உங்களிடம் இருக்கவேண்டும் இதற்கேற்றவகையில் மேற்படி பாகங்களைத் தெரிவுசெய்து கொள்வனவு செய்யவேண்டும்.

ஓரளவுக்கேனும் கணினிப்பாகங்களின் வகை மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் விபரங்களை தெரிந்திருக்கவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் விற்பனையாளர்கள் உங்கள் தலையில் புளி கரைத்துவிடுவார்கள். இதுவிடயத்தில் முன் அனுபவம் உடைய ஒருவருடைய ஆலோசனையினையோ உதவியையினையோ பெறுவதே நன்று.

சரி, இப்போது பாகங்களை கொள்வனவு செய்துவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். முதலில் Motherboard இனை பரிசோதிக்கவேண்டும். அதனை ஒப்பமான மேசையில் கடதாசி மட்டையின் மீதோ பெரிய புத்தகத்தின் மீதோ வைத்து உரியமுறையில் Processor ரினையும் அதன் விசிறியையும் பொருத்துங்கள். பின்னர் Motherboard இல் RAM இனை பொருத்துங்கள். அடுத்து Power Supplier இன் பிரதான மின் வழங்கி கேபிளை Motherboard இல் இணையுங்கள். இப்போது Monitor இன் Data Cable ஐ Motherboard இல் உள்ள நீலநிற VGA Adoptor இல் பொருத்துங்கள்.

இவையனைத்தும் தற்காலிக பொருத்தல்களே. எல்லாம் வெறுமனே மேசையிலே வைத்து செய்யவேண்டியவைகள். இப்போது Power Supplier க்கு மின் இணைப்பை வழங்கி Motherboard இல் ஒரு மூலைப்பகுதியில் இருக்கும் "Front Panel" பகுதியில் Power Button க்குரிய இரு Pin களிடையே மின்பரிசோதனை திருகி மூலம் குறுஞ்சுற்றை ஏற்படுத்துங்கள். மாதிரிக் கணினி இயங்க ஆரம்பித்து விட்டதா? இல்லையெனில் Motherboard கையேட்டின் உதவியுடன் "Jumper Setting" செய்யவேண்டும். கணினி இயங்க ஆரம்பித்து Monitor இல் Motherboard Message வந்துவிட்டதா? அப்படியெனின் உங்கள் Motherboard நலமாகவே உள்ளது என்று பொருள். இனி நீங்கள் மின்னைத்துண்டித்துப் பொருத்திய பாகங்களை ஒவ்வொன்றாகப் பக்குவமாக கழற்றியபின்னர் Motherboard இனை Casing இல் இணையுங்கள். இனி முன்பு பொருத்திய பாகங்களையும் Hard Disk, CD Rom, Floppy Drive போன்றவற்றையும் பக்குவமாக பொருத்துங்கள்

இனி Casing இன் முன்பகுதியில் இருந்து வரும் Power Restart மற்றும் Speaker, Audio, U.S.B. வயர்களை உரிய இடத்தில் கையேட்டின் உதவியுடன் பொருத்தவும். அத்துடன் Hard Disk, CD Rom, Floppy Drive போன்றவற்றின் Data மற்றும் Power Cable களை உரிய இடங்களில் பொருத்தவும். இனி Casing ஐ மூடி கணினியின் மற்றைய பாகங்களான Monitor, Keyboard, Mouse ஆகியவற்றினை இணைத்து மின்னை வழங்கி கணினியை இயக்கவும். Operating System CD ஐ CD Rom இனுள் இட்டு கணினியை மீள இயக்கவும். இப்பொழுது கணினி சீடியில் இருந்து இயங்குவதற்கு ஏதாவது விசையினை அழுத்தச் சொல்லிக் கேட்கும் அப்போது விசையை அழுத்தி உள்சென்று Hard Disk ஐ பகுதிகளாகப் பிரித்து Operating System இனைன கணினியில் நிறுவுங்கள். பின்னர் Motherboard உடன் கிடைத்த சீடியின் உதவியுடன் Display Adaptor மற்றும் Audio Driver இனையும் நிறுவுங்கள். பின்பு தேவையான Software களையும் நிறுவிக்கொள்ளவும்

மின்னைவழங்கி கணினியை இயக்கும்போது கணினி இயங்கமறுத்தால் Casingனை கழற்றி பொருத்தப்பட்ட Cableகளை சரிபார்க்கவும். பிழையான முறையில் பொருத்தப் பட்டிருப்பின் கணினி இயங்கமறுக்குமே தவிர கணினியின் பாகங்கள் பாதிக்கப்பட சந்தர்ப்பங்கள் குறைவு. ஏனெனில் Power Supplier அதற்கேற்ற வகையிலேயே வடிவமைக்கப் படுகின்றன. எனவே எவ்வித பயமுமின்றி கையேட்டின் உதவியுடன் பாகங்களை பொருத்தத் தவறாதீர்கள்

கணினியின் Hard Disk இனை பகுதிகளாக பிரித்து எவ்வாறு Format செய்வது என்பது பற்றி விரிவாக பின்னர் தருகிறேன்

## நினைவகத்தை கூட்டுதல்

**Q** எனது கணினி Pentium Celeron/1100 MHz/128 MB SD RAM ஆகவுள்ள வன்பொருட் தகவு நிலையைக் கொண்டுள்ளது. இதற்கு மேலும் ஒரு 256 MB SD RAM ஒன்றை போடுவதற்கு என் கணினி Support பண்ணுமா? 128 MB SD RAM உடன் இன்னுமொரு 256 MB SD RAM ஒன்றை போடலாமா? இல்லாவிடின் அதனுடன் மேலுமோர் அதே வகையான 128 MB SD RAM ஐ தான் போட முடியுமா?

*F. பார்த்தீபன், மட்டக்களப்பு.*

**A:** உண்மையில் கணினியில் அதிகூடியதாக எந்த அளவு வரை RAM இனை இடலாம் என்பதனை தீர்மானிப்பது கணினியின் Motherboard ஆகும் குறித்த Motherboard கையேட்டில் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் உங்கள் கணினி Pentium 3 வகையினைச் சேர்ந்ததாகும். கணினியின் தற்போதய தரவுகளை நோக்கும்போது அநேகமாக உங்கள் Motherboard 512 MB அளவு வரை அனுமதிக்கக்கூடும். Motherboard வகையினை தெரிவித்திருந்தால் நிச்சயமானபதிலை தரமுடிந்திருக்கும். எனினும் Motherboard அனுமதிக்குமாயின் இன்னொரு 256 MB SD RAM இனை இடுவதில் பிரச்சனை எதுவுமில்லை இரண்டினதும் வேகம் ஒன்றாயிருக்கவேண்டும். (SD RAM இனை பொறுத்தவரையில் 100, 133 அளவுகளில் வேகம் காணப்படுகின்றது)

## நினைவகம் போதுமா?

**Q** எனது கணினி P-III/950 MHz/512 MB RAM ஆகவுள்ள தகவு நிலையைக் கொண்டுள்ளது. தற்பொழுது இதில் Windows 98 போடப்பட்டுள்ளது. இதில் Windows 98 உடன் Windows XP, Vista O/s களை ஒரே தடவையில் Install செய்யலாமா? அதற்கு குறைந்தபட்சம் எவ்வளவு MB RAM தேவைப்படும்? தயவு செய்து விளக்கமாகத் தரவும்.

*எம்.எஸ்.எம். ஸப்ரின், களுத்துறை தெற்கு.*

**A:** உங்கள் கணினியில் Windows 98 உடன் Windows XP, Vista களை ஒரே தடவையில் Install செய்யலாம். அதற்கு 128 MB அளவுள்ள Graphic Card வேண்டும். அத்துடன் Hard Disk இன் அளவு 20 GB அளவுக்கு கூடியதாக இருக்கவேண்டும். எனினும் மிகக்குறைந்த தேவைப்பாடுகளைப்பொறுத்தவரையில் உங்கள் கணினி அவற்றைக் கொண்டிருந்தாலும் Windows XP, Vista O/s களை நிறுவினால் அது எந்தளவுக்கு வேகமாக இயங்கும் என்பது கேள்விக்குரியதாகும். ஒன்றுக்கு மேற்பட்ட Operating System களை நிறுவிக்கொள்வதால் வேகம் குறையும் என்று பொருளல்ல. ஏனென்றால் ஒரு தடவையில் ஏதாவது ஒரு Operating System தான் இயங்கும். ஆனால் Vista போன்ற குறித்த பெரிய வகை Operating System கள் இயங்குவதற்கு உங்கள் கணினி பொருத்தமற்றது என்று கூறலாம். நீங்கள் Pentium 4 வகை கணினிக்கு மாறினால் குறித்த Vista இனது முழுப் பயனையும் பெற முடியும்

Help Desk பகுதிக்கு கேள்விகளை அனுப்பும் வாசகர்கள் தங்களது கேள்விகளை போதுமான விபரங்களுடன் எழுதியனுப்பவும். பிரசுரத்திற்கு ஏற்ற வகையில் சுருக்கி எழுதி அனுப்ப வேண்டாம். கேள்விகளை ஆசிரியர் சுருக்கி பிரசுரிப்பார். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி : Help Desk, Tamil PC TIMES Magazine, Wijeya Newspapers Ltd., No.08, Hunupitiya Cross Road, Colombo - 02.

## TV Card மூலம் பார்ப்பதை கணினியில் Video File ஆக Save செய்தல்.

**Q** Computer ஒன்றில் TVநிகழ்ச்சிகளை எவ்வாறு பார்க்கலாம்? TV Card மூலம் TV நிகழ்ச்சிகளைப் பார்க்கலாமென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். எனவே TV Card மூலம் TVநிகழ்ச்சி களைப் பார்ப்பதற்கான என்னென்ன வேலைகள் செய்யவேண்டும் என்பதனை ஒழுங்கு முறைப்படி கூறவும். Computer இல் TV Card மூலம் TV நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும் Booster பொருத்த வேண்டுமா?

Computer இல் TV Card இன் மூலம் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது Computer இல் நடைபெறும் செயற்பாடுகளையும், நாம் பார்க் கும் காட்சிகளை Video File ஆக Save பண்ணலாமா என்பதனையும் தெளிவுபடுத்தவும் அத்தோடு Computer இல் TV நிகழ்சசிகளைப் பார்ப்பதற்கு ஒரு கணினி கொண்டிருக்க வேண்டிய Hardware இன் குறைந்த பட்ச அளவையும், TV Card வகைகளையும் அதில் எவ்வகை சிறந்ததென்பதையும் தெளிவுபடுத்துக.

*U.L.A.றஸ்மி, ஏறாவூர்.*

**A:** உங்கள் கேள்வியிலேயே பதில்களையும் கூறி சந்தேகம் கேட்கிறீர்கள். எது எவ்வாறாயினும் TV Card மூலம் TV நிகழ்ச்சிகளைப் பார்க்கலாமென்பது உண்மையே. இந்த Card இனை சாதாரணமாக Modem, Network மற்றும் Sound Card கள் பொருத்துவதுபோல கணினியை நிறுத்தியபின்னர் PCI Slot இல் பொருத்தவேண்டும் தற்போது கணினியை இயக்கும்போது புதிய Hardware சாதனம் ஒன்று கணினியில் சேர்கப்பட்டிருக்கின்றது எனவும் அதற்கான Driver ரை நிறுவும்படியும் ஒரு Window மூலம் கேட்கப்படுவீர்கள். அவ்வேளை குறித்த Card இற்குரிய Driver CD இனை ROM இனுள் இட்டு நிறுவவும் இனி அன்ரனா கேபிளையோ அன்றி கேபிள் தொலைக்காட்சி கேபிளையோ TV காட்டில் பொருத்தவேண்டும். பின்பு Speaker Wire இனை கணினியின் Audio துளையில் இருந்து கழற்றி TV Card இனது Audio துளையில் பொருத்தவேண்டும். மேலும் Cardடுடன் கிடைக்கப்பெற்ற மேற்படி சீடியில் இருக்கும் Software இனை கணினியில் நிறுவி அதனுடாக தொலைக்காட்சியினை கணினித்திரையில் பார்வையிடலாம். தேவையான காட்சிகளை குறித்த மென்பொருளின் உதவியுடன் சேமித்தும் கொள்ளலாம். மேலும் Booster அவசியமா என கேட்கிறீர்கள். நீங்கள் சாதாரண தொலைக்காட்சிக்கு அன்ரனா மூலம் இணைப்பு கொடுத்திருந்தால் அன்ரனாவில் Boosterஇருக்குமல்லவா. அதுபோலவே இதற்கும் தேவை. கேபிள் T.V இணைப்பு என்றால் அவசிய மில்லை. சுருங்கக்கூறின் இங்கு தொலைக்காட்சிப்பெட்டிக்கு பதிலாக கணினியை உபயோகிக்கிறீர்கள் அவ்வளவுதான். அத்தோடு Computer இல் TV நிகழ்சசிகளைப் பார்ப்பதற்கு ஒரு கணினி கொண்டிருக்க வேண்டிய Hardware இன் குறைந்த பட்ச அளவை குறித்த TV card தான் தீர்மானிக்கும். சாதாரணமாக Pentium 3 மற்றும் Pentium 4 கணினிகள் அதற்கு ஏற்றவையே. பிரபல்யமான TV Card வகைகளாக AverTV, PixelView களை குறிப்பிடலாம். ■

தகவல் தொழில்நுட்பத்தின் உயிர்ப்பான மாற்றங்களை உடனுக்குடன் அறிந்திட

**கட்டாயம் வாசியுங்கள்**

PC TIMES

# செல்லரிக்காத நிழற்படங்கள்



A.R.M. சர்ஜுன்

நாம் எடுக்கும் நிழற்படங்கள் நம் வாழ்க்கையின் மகிழ்ச்சியான காலங்களை திரும்பிப் பார்க்க உதவுகின்றன. நம் சரித்திரத்தை நாமே சந்தோசத்துடன் படிக்க உதவுகின்றன. ஆனால் காலப் போக்கில் இவை கலையிழந்து, கலரிழந்து போகின்றன அல்லது கிழிந்து போகின்றன. ஆனால் இன்றய டிஜிட்டல் உலகம் நமக்கு அவற்றை காப்பாற்ற கை கொடுக்கிறது. காலம் காலமாய் அவற்றை அழிந்து போகாமல் பாதுகாத்திட வழிகளைத் தருகின்றது. அந்த வழிகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

முதல் படியாக உங்களிடம் உள்ள நிழற்படங்களை செல் லரிக்க விடாமல் **Scanner** கொண்டு **Scan** செய்து நிழற்படக் கோப்புகளாக மாற்றுங்கள். நிழற்படக் கோப்பு வடிவமைப்பு களாக **JPEG, GIF, PNG, TIFF, BMP** என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்த கோப்புகளை **CD-R** அல்லது **DVD-R Disk** இல் பதியுங்கள். ஆண்டாண்டு காலமாக இவை உழைப்பதால் உங்கள் எதிர்காலச் சந்ததிகளும் இந்தப்படங்களை கண்டு மகிழலாம்.

நிழற்படக் கோப்புகளை அப்படியே **CD-R** அல்லது **DVD-R Disk** களில் பதிப்பதை விட அவற்றை ஒழுங்காக அடுக்கிப் பின்பு பதிக்கலாம். புகைப்படங்களை எடுத்த திகதி வாரியாக அடுக்கலாம். அல்லது உறவினரகள், நண்பர்கள் எனப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றை அடுக்கலாம். இந்த வேளைகளை இலகுவாகச் செய்வதற்கு **Photo Album** பிரிவைச் சேர்ந்த பல மென்பொருள்கள் உள்ளன. **Jalbum, Picasa, Adobe Photoshop Album** போன்றவற்றை எடுத்துக் காட்டுக்காக குறிப்பிடலாம். **Picasa** போன்ற மென்பொருளை இலவசமாக இணையத்திலே பதிவிறக்கிப் பாவிக்கலாம்.

உங்கள் அழகிய வாழ்வின் நினைவுகளை, ஆனந்தமான நிலைகளை என்றுமே கண்டு இரசிக்க டிஜிடல் வகையாக நிழற்படங்களை சேமித்து வைக்க முனையுங்கள். ■

## WIN FREE SUBSCRIPTIONS

*கடந்த மாத கேள்விக்கான விடை*

**DNS Server** கள் இணையத்தள முகவரி களை **IP** முகவரிகளாக மாற்றம் செய்து, கணினிகளின் மூலம் இணையப் பக்கங் களைப் பார்வையிடுவதை சாத்தியமாக்கு கிறது.

*விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:*

*Win PC Times*
*PC Times Magazine,*
*Wijeya Newspapers Ltd.,*
*No. 08, Hunupitiya Cross Road,*
*Colombo -02.*

*இம் மாதத்திற்கான கேள்வி:*


**Open Source** வகை மென்பொருள்கள் இணையத் தளமேடையின் எத்தனை சதவீதத்தை தமது ஆளுகைக்குள் கொண்டுள்ளது?


*மார்ச் மாத வெற்றியாளர்கள்*

- V. சொர்ணலிங்கம், 5/5, மாமாகம் வீதி, மட்டக்களப்பு.
- Z.N. ரம்சியா, 7/3, தைக்கியா வீதி, சம்மாந்துரை - 01.
- A. சப்ராஸ், 457, கலேகம, கெக்குனுகொல்ல.
- G. கபிலேஸ்வரன், 55/12B, சென் ஜுடிஸ் ஒழுங்கை, கொழும்பு -15.
- M.W.M. சல்மி, நொக்ஸ் வீதி, மூதூர் -05.
- G. சர்வேஸ்வரன், ஹில்லாரி வீதி, சாவக்கட்டு, மன்னார்.
- S. தியாகராஜா, 97/26, கனம்பிட்டிய வீதி, காலி.
- S. ராகுலன், 312/2, சொய்சாபுர மாடிகட்டிடம், மொரட்டுவ.
- M.I. நஸ்ரி 197/6A, கல்பொக்க வீதி, வெலிகம.
- Q. நீல்பிரகாஷ் 137/4, கந்தசாமி கோவில் வீதி, 1வது ஒழுங்கை, ரம்பிகுலம், வவுனியா.

*வெற்றியாளர்களுக்கு மே மாதம் முதல் மூன்று மாதங்களுக்கான தமிழ் PCTIMES சஞ்சிகை தபால் மூலம் அனுப்பி வைக்கப் படும்.*

*கேள்விக்கான விடையை தபால் அட்டை யில் அல்லது pctimes@wijeya.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.*






# ஐந்து இலக்குகளை அடைந்தாலே வெற்றி


கணினி விளையாட்டுக்களில் ஏதாவதொரு இலக்கு காணப்படும். நாம் இம்முறை அறியப்போகும் Sid Meier's Civilization IV எனும் கணினி விளையாட்டானது. ஐந்து முக்கிய இலக்குகளைக் கொண்டு காணப்படுகிறது. இக்கணினி விளையாட்டானது. turn-based strategy வகையானதாகும். Soren Johnson எனும் வரைகலைஞரால் உருவாக்கப்பட்ட இவ்விளையாட்டில் முப்பரிமாண நிலையிலமைந்த காட்சிகள் மிகவும் துல்லியமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

கணினி விளையாட்டில் ஈடுபடுபவருக்கு தனக்கேயுரித்தான சாம்ராஜ்யம் ஒன்றை ஆரம்பத்திலிருந்தே கட்டியெழுப்ப வேண்டியது கடமையாகிறது. இது ஏனைய போட்டியான நாடுகளுக்கிடையே போர் தொடுத்து. சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பும் முயற்சியாகும். இங்கு நாடுகளிடையே யுத்தம் புரிந்து வெற்றி பெறுவதோடு நின்றுவிடாமல், வெற்றியடையும் நாடுகளின் புவியியல் ரீதியான விடயங்களை ஆளுதல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், மற்றும் விஞ்ஞான ரீதியான கலாசார நிலைகளை உண்டாக்குதல் போன்ற விடயங்களையும் குறித்த கணினி விளையாட்டில் ஈடுபடுபவர் ஆற்றவேண்டும்.

அனைத்து நாகரீகங்களையும் இணைத்தல், உலகின் அதிகளவான நிலம், சனத்தொகையை ஆளுதல், விண்வெளி ஆராய்ச்சிக்கான அடிப்படையை உருவாக்குதல், கலாசார விழுமியங்களின் ஆதிக்கத்தை அதிகரித்தல் மற்றும் உயர் பதவி நிலையில் தன்னைத் தக்க வைத்தல் ஆகிய ஐந்து விடயங்களுமே, கணினி விளையாட்டில் ஈடுபடுவர் அடைய வேண்டிய இலக்குகளாகும்.

தரப்படும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் மேற்சொன்ன இலக்குகளை அடைந்திருந்தால் மாத்திரமே, கணினி விளையாட்டில் ஈடுபடுபவர் விளையாட்டில் வெற்றியடையலாம். அவ்வாறில்லாவிட்டால், அதிக புள்ளிகளைக் கொண்ட தேசம் வெற்றியாளராகக் கணிப்பிடப்படும்.

இத்தனை விடயங்களையும் செய்யும் வகையில் மிகவும் நுணுக்கமான வகையில் அசைவூட்டங்கள் (Animation) இக்கணினி விளையாட்டு பூராக கையாளப்படுகிறது வியக்கத்தக்க அனுபவம் ஒன்றையே தரும். ■




## MINIMUM SYSTEM REQUIREMENTS

- Operating System: Windows 2000 or above
- CPU Processor: PowerPC G5 or Intel
- CPU Speed: 1.8 GHz or faster
- Memory: 512 MB or higher
- Hard Disk Space: 3.5 GB free disk space
- Video Card (ATI): Radeon 9600-
- Video Card (NVidia): GeForce FX 5200-
- Video Memory (VRam): 64 MB or higher
- Media Required: CD Drive

*செல்லப் பிள்ளை*



# ஆச்சரியம் தந்த ஆராய்ச்சி!

IBM Hard Disk ஒன்றில் வாசிக்கும் தலை வன்தட்டு பரப்பிலிருந்து விலகியிருக்கும் தருணத்தை காட்டும் படம்.

*தாரிக் அஸீஸ்*

கூகிள் என்றாலே அது புதுமை, ஆச்சரியம், மற்றும் வித்தியாசமான சிந்தனை என்பதாகத் தான் இருக்கும். இங்கே, கூகிள் செய்த ஆராய்ச்சியிலும் இவ்வாறு புதுமை, ஆச்சரியம் நிறைந்த முடிவுகள் பெறப் பட்டுள்ளன. கணினியில் தரவுகளைச் சேமித்து வைக்க வன்தட்டுகள் எனப் படும் Hard diskகள் பயன்படுத்தப்படு கின்றன. ஆரம்பகாலத்தில் மெகா பைட்கள் அளவான தரவுகளைச் சேமிக்க பாரியளவான Hard diskகள் பாவனை யிலிருந்தன. இன்று மிகச்சிறியளவான Hard diskகள் Giga bytes, Tera bytes கொள்ளளவுகள் கொண்டதாகப் பாவனை க்கு வந்துள்ளன.

2001 ஆம் ஆண்டிலிருந்து, கூகிள் நிறுவனம் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் Hard disk களை அவதானத்திற்குட்படுத்தி ஆராய்ச்சி செய்தது. இந்த Hard disk கள் 80GB தொடக்கம் 400 GB வரை கொள்ளளவைக் கொண்டவைகளாகும்.

"Hard disk களை கூகிள் ஏன் அவதானிக்க வேண்டும்?" – நியாயமான கேள்வி.

சேமிக்கப்பட்டுள்ள தரவுகள், தகவல்கள் என்பவை Hard disk களின் செயலிழப்பினால் தொலைந்து போனால், கூகிளே கதியென எண்ணியிருக்கும் மில்லியன் கணக்கான, கணினி

## வன்தட்டு எனும் Hard Disk



- உருவாக்கப்பட்ட திகதி: 1956 செப்டெம்பர் 13
- கண்டுபிடித்தவர்: Reynlod Johnson
- இணைக்கும் கூறுகள்: Mother board உடன் Controller எனப்படும் அலகால் இணைக்கப் படும். (PATA (IDE), SATA, SCSI, SAS)

படத்தில் காணப்படும் Hard Disk ஆனது ஒரு Terabyte கொள்ளளவுடையதாகும். இது அண்மையில் Hitachi நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்டது.

பயனர்களின் கதி என்னாகும்? ஆக, Hard disk கள் தமது தொழிற்பாட்டை செவ்வனே செய்ய மறுக்கும் தருணங்கள்

**இலவசமாகத் தரவுகளைச் சேமிப்பதற்கு வகை தொகையின்றிக் கொள்ளளவுகளை வழங்கும் கூகிள் நிறுவனம் அண்மையில் செய்த ஆராய்ச்சி பல ஆச்சரியமான முடிவுகளைத் தந்துள்ளது.**

என்ன? தடவைகள் எத்தனை? என அறிந்து கொள்வதே இந்த ஆராய்ச்சியின் நோக்கமாக இருந்தது. இதனை அறிந்து வைத்திருத்தல், இலவசமாகக் கொள்ளளவை வழங்கும் கூகிள் போன்ற நிறுவனத்திற்கு அவசியம் தானே! இந்த Hard disk அவதானங்களின் போதே, நாம் மேலே சொன்னதுபோன்ற ஆச்சரியமான முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.


ஆராய்ச்சியின் முடிவுகள், Hard disk பற்றிய பல பாரம்பரிய உண்மைகளைப் பொய்ப்பித்துள்ளன. கூகிள் நிறுவனத்தின் Eduardo Pinheiro, wolf- Dietrich weber மற்றும் Luiz Andre Barroso ஆகிய மூன்று பொறியியலாளர்களினால் தயாரிக் கப்பட்டுள்ள இவ்வாராய்ச்சி தொடர் பான அறிக்கையில் புதுமையான

AP PHOTO/JAE C. HONG

ஆச்சரியம் மிகுந்த தகவல்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.


சாதாரணமாக உயர் வெப்பநிலையில் Hard disk கள் பழுதடையும் நிகழ்தகவு மிகவும் உயர்வானதென்றே இதுவரை நம்பப்பட்டது. Google இன் ஆராய்ச்சி முடிவுகள், இதுநாள் வரை நம்பப்பட்டு வந்த அவ்வுண்மையை பொய்யாக்கியுள்ளது. குறைந்த வெப்பநிலையே Hard disk கள் பழுதடைவதற்கு ஏதுவான சாத்தியங்களை அதிகம் உண்டாக்குவதாக ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆனாலும், அதியுயர் வெப்பநிலையில் Hard disk கள் பழுதடையும் சாத்தியங்களும் இருக்கவே செய்கிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை, Hard disk களை Scan செய்யும்போது வழுக்களைக் (Errors) காண்பிக்கும் Hard diskகள் பழுதடையும் நிகழ்தகவு மிகவும் அதிகமானதென்றும் தெரிவிக்கப் படுகின்றது.

## விரிந்து செல்லும் Hard Disk கொள்ளளவு




தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக Hard disk இன் கொள்ளளவு நாளுக்கு நாள் மிகத் தீவிரமாக அதிகரித்து வருகின்றது. மேற்படி வரை, காலத்துடன் Hard disk இன் கொள்ளளவு மாறிவருவதை வகை குறிக்கிறது.

## வாசிக்கும் அலகு



Hard disk ஒன்றில் சேமிக்கப்பட்டுள்ள தரவுகளை வாசித்தறிந்து மீட்டும் கருமத்தைச் செய்யும் Hard disk head எனப்படும் வாசிக்கும் அலகின் பெரிதாக்கப்பட்ட நிழற்படத்தையே காண்கிறீர்கள்.

சாதாரண Hard disk களை விட, Errors காணப்படும் Hard diskகள் தாழ் வெப்பநிலையில் பழுதடையும் வாய்ப்பு பத்து மடங்கு அதிகமானதென சொல்லப் படுகின்றது. மேலும் Error களை காண்பிக்கும் Hard diskகள், Error களை காண்பிக்கத் தொடங்கிய நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பழுதடையும் வாய்ப்பு 39 மடங்கு உயர்வென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று வருடத்திற்கு குறைவாக மிக அதிகளவில் பாவிக்கப்பட்ட Hard disk களை விட, அதே வயதுடைய அதிகம் பாவிக்கப்படாத Hard diskகள் பழுதடையும் வீதம் மிகவும் உயர்வாகுமென்ற ஆச்சரியத் தகவலும் கூகிள் ஆராய்ச்சியிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி முடிவுகள், பாரம்பரியமாக நம்பப்பட்டு வந்த Hard disk களின் செயற்பாடு தொடர்பான பல எண்ணங்களைத் தகர்த்தெறிந்தாற் போல் அமைந்துள்ளதென ஆராய்ச்சியில் ஈடுபட்ட கூகிள் பொறியியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ■

**Send in your comments**
*pctimes@wijeya.lk*



மீள் சுழற்சி: கலிபோனியாவில் உள்ள Hewlett-Packard நிறுவனத்தின் மீள் சுழற்சி செய்யும் பிரிவில் மீள் சுழற்சிக்காக கணினி வன்பொருள் பகுதிகள் குவித்து வைக்கப்பட்டுள்ளது.

கடமை: Hewlett-Packard நிறுவனத்தின் ஊழியர்கள் மீள் சுழற்சிப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

AP PHOTO/STEVE YEATER




உதய தாரகை

**தே**டல் பொறி சேவையோடு ஆரம்பித்த கூகிளின் செயற்பாடுகள் இப்போது கணினிப் பாவனையோடு சம்பந்தப்பட்ட பல நிலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கணினிப் பாவனையென்றால் அதற்கு கட்டாயம் கூகிளின் அனுசரணை அவசியம் என்ற நிலை ஏற்படும் அளவுக்கு இந்தச் சேவை விரிவாக்கம் அமைந்து வருகின்றது.

## சிங்கப்பூரில் கூகிள்

தென்கிழக்காசியாவின் மிகப் பாரிய பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட ஆசியாவின் சுறுசுறுப்பான நாடாக வர்ணிக்கப்படும் சிங்கப்பூரில், தென்கிழக்காசியாவின் முதலாவது ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தை கூகிள் ஆரம்பிக்கவுள்ளது. தனது புதுமைச் சிந்தனைகளை தென்கிழக்காசிய மக்களிடையே பிரபல்யமடையச் செய்வதற்கு சிங்கப்பூரே மிகச் சிறந்த இடமாகுமென கூகிள் தீர்மானித்துள்ளது.

சிங்கப்பூர் அரசாங்கமும், பாரம்பரிய திறனற்ற உற்பத்தித் துறைகளை விடுத்து, உயர் தொழில்நுட்ப வருவிளைவுகளைத் தரக்கூடிய தொழில் நிலைகளை ஊக்குவிப்பதில் அதிகம் ஆர்வங்காட்டி வருகிறது. இதனால், அங்கு கூகிளின் புதிய ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தை அமைக்கும் சாத்தியம் எளிதாக்கப்பட்டுள்ளது.

புதிய சிந்தனைகளை வளமாகக் கையாளுவதில் கூகிள் காட்டும் முயற்சியும், உயர் தொழில்நுட்ப விடயங்களில் சிங்கப்பூர் அரசு காட்டும் ஆர்வமும் ஒன்று சேரும்போது நிச்சயமாக அது பல அதிசயமான வருவிளைவுகளைத் தரும் என்பதில் சந்தேகம் கிடையாது. தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான எமது நாட்டுக்கும் இந்நிலையத்தால் பல நன்மைகள் எதிர்காலத்தில் எட்டக்கூடும். வளமான சிந்தனைகளை வாழ்த்துவோம்!

## போட்டி போடும் கூகிள்


கூகிளின் மூலம் வழங்கப்படும் சேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. கூகிளின் சேவைகளுள் Gmail, Calendar மற்றும் Docs & Spreadsheets ஆகியன கணினிப் பயனர்களிடையே வெகுவாக பிரபல்ய மடைந்தவையாகும். இத்தனை சேவை


சிங்காரம்: சிங்கப்பூரின் அழகான தோற்றம்.



ஆனந்தம்: கூகிள் அலுவலகத்திற்குள்ளே வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள்.

## Microsoft அன்றும் எதிர் Google இன்றும்




Microsoft, Google ஆகிய இரண்டு கம்பனிகளும் மிகவும் தீவிரமான போட்டியில் ஈடுபடுகிறார்கள். தேறிய வருமானத்திலும் பங்கு விலையிலும் கணிசமான அளவு முயற்சியை காட்டுகின்றார்கள். இரு கம்பனிகளினதும் அறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட வரைபே மேற்காணப்படுவதாகும்.



G கூகிள் ஓய்வறை



G கூகிள் சிற்றுண்டி கூடம்

களையும் கூகிள் கணினிப் பயனர்களுக்கு இலவசமாகவே வழங்குவதும் யாவரும் அறிந்ததே!

இந்த வளர்ச்சிப் படிகளின் அடுத்த கட்டமாக, பணம் கட்டுவதன்மூலம் இந்தச் சேவைகளை இன்னும் அதிகளவில் பெறுவதற்கும் கூகிள் வழிசெய்துள்ளது. இந்த அறிவிப்பு சிறியளவிலான கம்பனிகளை இலக்காகக் கொண்டே செய்யப்பட்டுள்ளது. இலவசமாகப் பெறும் Gmail Account இல் 2.8GB இடவசதியே காணப்படும். ஆனால், பணம் செலுத்திப் பெறும் சேவையின்போது 10GB கொள்ளளவு வசதியும், தொலைபேசி மூலம் உதவி பெற்றுக்கொள்ளும் வசதியும், 99.9 சதவீதம் தடங்கலின்றித் தொழிற்படும் என்ற உத்தரவாதமும் பாவனையாளர்களுக்கு கூகிளால் வழங்கப்படுகிறது. அத்தோடு, இலவச சேவையில் விளம்பரங்கள் காட்சியாவது போன்று, இந்தப் பணம் செலுத்திப் பெறும் சேவையில் விளம்பரங்கள் காட்சியாகாது. இந்தச் சேவையின் மூலம் சிறியளவிலான கம்பனிகள் தங்கள் e-mail களை பேணிப் பாதுகாக்கும் வசதியைப் பெற்றுக்கொள்வார்கள் என கூகிள் தெரிவிக்கின்றது.

Microsoft இன் office 2007 தொகுதிக்கு நிகரான சேவையை குறைந்த விலையில் பயனர்களுக்கு வழங்கவே இவ்வாறான சேவையை பயனர்களுக்கு வழங்க கூகிள் முன்னிற்பதாக சில விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.




சவால்: கூகிளோடு நேருக்கு நேர் போட்டியிடும் Microsoft

இதற்கிடையில் - "Microsoft இற்கு இக்காலம் மிகவும் கஷ்டமானது. பல தடைகளையும் கடக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது" என Nucleus Research இன் ஆய்வுகளுக்கான பிரதித் தலைவர் Rebecca Wettemann கருத்துத் தெரிவிக்கின்றார்.

Microsoft, Googleஐ இலக்குவைத்துத் தனது முன்னெடுப்புகளைச் செய்வதாக 2007 ஜனவரி மாத தமிழ் PCTIMES இதழில் நாம் எதிர்வு கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கூகிளின் இந்த நடவடிக்கையில் நாம் சளைக்கமாட்டோம் என்றாற் போல், Microsoft நிறுவனம் BT எனப்படும் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் இணைந்து சிறியளவான கம்பனிக்கு சகாய விலையில் Ms office 2007 தொகுதியை இணையத்தினூடாக பராமரிக்கும் வசதியை வழங்கும் வேலையில் களமிறங்கியுள்ளது.

யாருக்கும் யாரும் சளைத்தவர்களல்லர் என்று பல சந்தர்ப்பங்களிலும் Microsoft உம் Google உம் போட்டிபோட்டுக் கொண்டு செயற்படுவதானது, கணினிப் பயனர்களுக்கு அதிகமதிகமாக சேவைகளை மிகவும் எளிதாக பெற்றுக்கொள்ளும் நிலையையே ஏற்படுத்துகிறது எனலாம்.

கூகிளுக்கும், Microsoft இற்கும் ஒரு சபாஷ் போடலாம்!. ■

## இம்மாத மென்பொருள்

# FOLDER LOCK

ZEEZAT

உங்கள் ஆவணங்களை இன்னொருவர் பார்க்கக்கூடாது என நீங்கள் எண்ணியிருந்தால், அவற்றை பாதுகாக்க ஆவணங்களை உருவாக்கும் செய்நிரல்களில் சில ஏற்பாடுகள் இருக்கும். ஆனால் அனைத்து செய்நிரல்களிலும் இந்த ஏற்பாடு காணப்படாது.

நீங்கள் தயாரித்த, உங்கள் தனிப்பட்ட விடயங்கள் அடங்கிய ஆவணங்களை கணினியில் பாதுகாப்பாக யாருமே பார்க்க முடியாத வகையில் கடவுச் சொல் (Password) வழங்கி, Lock செய்து, மறைத்து (Hide) வைத்து அல்லது சங்கேதமாக்கி (Encrypt) செய்ய Folder Lock எனும் மென்பொருள் உண்டு.


மிகவும் அழகான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள மிகச் சிறிய அளவுடைய Folder Lock எனும் மென்பொருள் மூலம், நீங்கள் ஏனையவர்கள் பரிகரணம் செய்யக்கூடாதென நினைக்கும் அனைத்து கோப்புகளையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம். Locker எனும் சிறப்பு Folder ஒன்றினுள் நீங்கள் பாதுகாக்க நினைக்கும் அனைத்து File கள், Folder கள் ஆகியவற்றை இட்டு Password வழங்கி பாதுகாக்கலாம். அது மட்டுமல்லாது, சங்கேதமாக்கலின் மிகப் புதிய முறையான 256- bit Blowfish Encryption மூலம், உங்கள் File, Folder களை பாதுகாக்கலாம். இது கணினித் துருவிகளாலும் (Hackers) அவிழ்க்க முடியாத நீங்கள் பாதுகாக்க வேண்டிய File ஐ, அல்லது Folder ஐ Right Click செய்கையில் தோன்றும் Context Menu வில் Lock Folder என்பதனை தெரிவு செய்து, Password ஒன்றை வழங்கினால் காரியம் கச்சிதம்! Files மற்றும் Folders பாதுகாப்பிற்கு மிகவும் உகந்தமான மென்பொருளாக இதனைக் கருதலாம்.

2.2 MB எனும் மிகச் சிறிய கொள்ளளவுடைய இம்மென்பொருளை www.newsoftwares.net/folderlock எனும் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நீங்களும் இந்த மென்பொருளை கணினியில் நிறுவி, உங்கள் ஆவணங்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். ■




"உங்கள் ஆவணங்களை இன்னொருவர் பார்க்கக்கூடாது என நீங்கள் எண்ணியிருந்தால், அவற்றை பாதுகாக்க ஆவணங்களை உருவாக்கும் செய்நிரல்களில் சில ஏற்பாடுகள் இருக்கும். ஆனால் அனைத்து செய்நிரல்களிலும் இந்த ஏற்பாடு காணப்படாது.




**Kiss your Privacy worries Good bye with Folder Lock!**

# நறுமணம் கமழும் இணையம்

## எதிர்வு கூறப்படும் சாத்தியப்பாடுகள்

*உதய தாரகை*

இன்னும் பத்தாண்டுகளில் தரவுகளை வழங்கும் வேகத்தோடு இணைந்தாற்போல், மணத்தையும் வழங்கும் நிலையை இணையம் கொண்டிருக்கும் என அண்மைய ஆய்வு ஒன்றின் மூலம் எதிர்வு கூறப்படுகிறது.

எதிர்காலத் தொழில்நுட்ப நகர்வுகளில் மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என அறிவதற்காக தென்கொரியாவின் தகவல் மற்றும் தொடர்பாடல் அமைச்சினால் 3500 உள்ளூர் தொழில்நுட்ப வல்லுநர்களிடையே மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களின்போது பல்வேறு வகையான எதிர்வு கூறல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த எதிர்வுகூறல்களின் ஒன்று இணயத்தில் மணம் சம்பந்தப்பட்டதாக உள்ளது.

2015 ஆம் ஆண்டளவில், இணையத்தைப் பயன்படுத்தும் பயனர்கள் நறுமணம் கமழும் இணைய வலயத்தில் இணைந்து கொள்வார்களென இந்த ஆய்வில் எதிர்வுகூறப்பட்டுள்ளது. இணையமூடாக பரப்பப்படும் நறுமணம் டிஜிடல் தரவுகளாக இணையம் வழியாகப் பயணம் செய்து, குறித்த இணையப் பக்கம் பார்வையிடப்படும் கணினியில் பொருத்தப்பட்டுள்ள நறுமணப் பொதியுறையை (Scent Cartridge) செயற்படுத்தி, மணம் பரவுவதை சாத்தியமாக்கும் என நறுமண பரம்பலின் பொறிமுறை விளக்கப்படுகிறது.

இந்த எதிர்வுகூறலைச் செய்துள்ள அறிக்கையில் இன்னும் சில முக்கிய விடயங்களும் இடம்பெற்றுள்ளன. இரண்டு மாதங்களுக்கு Recharge செய்யத் தேவையில்லாதபடி, மின் சக்தியைச் சேமித்து வைக்கக்கூடிய Mobile Phone பற்றரிகளைப் பற்றியும் இங்கு எதிர்கூறப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்குத் தொடர்ச்சியாக சாதாரணமாக Recharge செய்யாமலேயே இயங்கக்கூடிய கையடக்கத் தொலைபேசி பற்றரிகள் 2012 ஆம் ஆண்டளவில் பாவனைக்கு வருமென எதிர்வுகூறப்படுகின்றது. ஏன் இதுமட்டுமா? 2018 ஆம் ஆண்டளவில் நோயாளிக்கு நுணுக்கமான சத்திர சிகிச்சைகளை மனித சத்திர சிகிச்சை நிபுணர்களுக்குப் பதிலாக ரோபோக்கள் தான் செய்யப்போகிறது என்று வேறு எதிர்வு கூறுகின்றார்கள்.



ஆயுள்: கையடக்கத் தொலைபேசியின் பற்றரியின் ஆயுள் அதிகரிக்கப்போகிறது

மனிதனின் குருதிக்கலங்களுக்குள் ஊடுருவிப் புகுந்து நோய்க் காரணிகளைக் கண்டு பிடித்து, அவற்றில் சத்திர சிகிச்சை செய்யக்கூடிய வல்லமையை micro robotகள் பெற்றிருக்கும் என்று சொல்லப்படுகின்றது. இவை அளவிலும் மிக நுண்ணியதாக அமையப்போகிறதாம் என்பது மற்றுமொரு போனஸ் தகவல்.

உயர் தொழில்நுட்பத்திற்குப் பெயர் போன தென்கொரியாவில், 34.1 மில்லியன் அல்லது மொத்த சனத்தொகையில் 70 சதவீதமான மக்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றார்கள். பலரும் உயர் பரிமாற்ற எல்லையுடைய Broadband வகை இணைய இணைப்பைப் பயன்படுத்துவதோடு, மாணவர்களின் கல்வி தொடர்பான பல விடயங்கள் இணையமூடாகவே பரிமாறப்படுகின்றன. இதன் காரணமாக பல விடயங்களைக் குறுகிய நேரத்தில் முகாமைத்துவம் செய்ய முடிவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொழில்நுட்ப விடயத்தில் இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள நாட்டிலிருந்து வரும் எதிர்வுகூறல்கள் சாத்தியமாகும் நிகழ்தகவு மிக உயர்வென்றே கூறவேண்டும். அத்தோடு, தென்கொரியாவின் தொழில்நுட்ப விடயங்கள் சார்பான முன்னேற்றகரமான நடவடிக்கைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள நிறையப் பாடங்கள் உள்ளன என்பதும் உண்மையே.... ■

# வாசகர் திருமுகம்

*சஞ்சிகையில் வெளிவரும் உள்ளடக்கங்களைப் பற்றி விபரிப்பனவாக வாசகர்கள் எழுதும் விபரமான விமர்சனங்களில் சிறந்த ஒரு வாசகர் திருமுகத்திற்கு மூன்று மாதங்களுக்கான PC Times சஞ்சிகை இலவசமாக வழங்க ப்படும்.*

*சஞ்சிகை தொடர்பான உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை அனுப்புகையில் பெயர், முகவரி ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவும்.*

### எனக்குப் பிடித்த பாடம்

தகவல் தொழிநுட்ப உலகில் காலடி எடுத்து வைக்கும், எடுத்து வைத்திருக்கும் அனைவருக்கும் கனினி அறிவை தமிழ் மொழி மூலம் ஊட்டும் ஒரேயொரு அரிய பொக்கிஷம் இந்த தமிழ் PC TIMES சஞ்சிகை. சென்ற இதழில் வெளியான "இணையப் பக்க வடிவமைப்பு (HTML), எனும் கட்டுரை எனக்கும் எனது நண்பர்களுக்கும் மிகவும் பயனளித்தது. அத்துடன் மென் பொருள் பகுதியில் வெளியான 'Crazy Talk' எனும் மென்பொருள் பற்றிய கட்டுரை உடனே இணையத்தளத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்யத்தூண்டியது.

மொத்தத்தில் மார்ச் மாத இதழில் வெளியான அனைத்து அம்சங்களும் தமிழ் PCTIMES சஞ்சிகையின் மீது கொண்டிருக் கும் நன்மதிப்பை வலுவாக்கியது.

*A.F. பஹத் அஹமட்,*
*கிண்ணியா.*

### வேகமான விவேகம் உருவாகிறது.....

★ "புதிதான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களின் அகராதி" என்று தமிழ் PC TIMES சஞ்சிகைக்கு புனைப்பெயர் சூட்டிவிடலாம். BlueGene/L எனும் கணினியை விட வேகமாக இயங்கும் கணினி உருவாக்கப்பட்டு, அது அமெரிக்காவின் அணுத்திரவியங் களின் ஆயுளினை கண்காணிக் கப் போகின்றது. புதிதான தொழில் நுட்ப கண்டுபிடிப்புக்கள் உலக மக்களுக்கு நன்மையை வழங்க வேண்டுமே ஒழிய தீமையை முன்னெடுத்துச் செல்வதாக இருக்கக்கூடாது. அந்த வகையில் உருவாகப் போகும் கடுகதி மீ கணினியாது உலகை அச்சுறுத்தும் அணுத் திரவியங்களுக்காகப் பயன் படப் போவதுதான் கவலைக்குரியது. இருப்பினும், இச்செயற்றிட்டம் உலக மக்களுக்கு நன்மையளித்தால் பாராட்டப்படக் கூடியதே.

*M.S. முஹமட் உவைஸ்,*
*பொத்துவில் -03*

### சிறப்பான புதிய சிந்தனைகள்

துரிதவளர்ச்சி பெற்றுவரும் தொழில்நுட்பத்துறையின் மாற்றங் களையும், புதிய கண்டுபிடிப்புக் கள் மற்றும் வெளியீடுகள் என்ப வற்றைஉடனுக்குடன்வெளியிடும் இலங்கையின் ஒரேயொரு தமிழ் மொழிமூல தகவல் தொழில்நுட்ப சஞ்சிகையாக தமிழ் PC TIMES உள்ளது என்பதில் ஐயமில்லை. இதில் Windows Vista மற்றும் Office 2007 போன்ற Microsoft இன் புதிய வெளியீடுகள் பற்றிய தகவல்களை வழங்கி தொழில் நுட்பத்தின் வியத்தகு தன்மையை எடுத்துக்காட்டிய தோடு, Help Desk எனும் கேள்விபதில் பகுதியுடன் மெருகூட்டப் பெற்று வெளியிடப்படுவது தொழில் நுட்பத்தின் பக்கம் வாசகரைக் கவர்ந்தெடுக்கும் காந்தசக்தியாகக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

*க.நிரூபன்,*
*தம்பிலுவில் -02.*

### வியக்கத் தோன்றும் விந்தைகள்

நாளுக்கு நாள் முன்னேறி வரும் தொழில்நுட்பத்தின் உள்ளார்ந்த செயற்பாடுகளை மாதம் தோறும் அள்ளி வழங்கும் தமிழ் PC TIMES இற்கு என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

கடந்த சஞ்சிகையில் "எம்முடன்நாமேபேசலாம்" என்ற தலைப்பில் அமைந்த "CRAZY TALK" எனும் மென்பொருளின் அறிமுகத்தை கண்டு வியந்தேன். இம்மென்பொருளை பெறுவது எப்படி? என்பதற்கு தக்க இணையத் தள முகவரியையும் வழங்கி மேலும் உற்சாகப்படுத்தி எம்மை ஊக்கப்படுத்திய தமிழ் PC TIMES ஒரு தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை மாத்திரமல்ல இது ஒரு வழிகாட்டியாகவும் தொழிற் படுகின்றது.

*கு.செந்தூரன்*
*மட்டக்களப்பு.*



★ என குறியிடப்பட்டுள்ள வாசகர் திருமுகத்தை அனுப்பியவர் மே மாதம் முதல் மூன்று மாதங்களுக்கான தமிழ் PC TIMES சஞ்சிகையை பெறும் வெற்றியாளராகிறார்.

"Wow" எனும் தலையங்கம் "Microsoft Vista" க்கு மட்டுமல்ல, எமது தமிழ் PCTIMES க்கும் பொருந்தும்.

பேரின்பம் ஹஜேந்திரன், மட்டக்களப்பு.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பொது தகவல் தொழில்நுட்பவியல் பாடவிதானத்தை வழங்குவது உபயோகமானது.

சு. சுவேதன், களுவாஞ்சிக்குடி.

தெரிந்த கணினியில் தெரியாத பல விடயங்களை தெரிய வைத்து எம்மைத் தெளியவைக்கும் உனது சேவை எமக்குத் தேவை.

T.M.J.N. ஜிப்ரியா ஜீவி, தர்கா நகர்.

சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரையும் கவரும் PC TIMES, இது அள்ளி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பரோ சூப்பர்.

M.U.M. நிமாஸ் உஸ்மான், பேருவளை.

உன்னை வாசித்த நாள் முதல் என்னை அறியாமல், எனக்குள் ஏதோ ஒரு திருப்பம். அது என்னவென்று தேடினேன் ஓடினேன், கணினிக் கல்வியின் அவசியம் பற்றி உணர்ந்தேன்.

அமீர் றஹ்மான், கல்முனை.

சஞ்சிகையின் புதுவரவுகளில் களிப்படைபவள் நான். கடந்த இதழில் வெளியான அத்தனை புதுவரவுகளும் தொழில்நுட்ப விருத்தியை குறித்து நின்றன.

சிப்றா செய்துதீன், புத்தளம்.

நீ தான் என் கணினிக் கல்விக்கு முதல் வித்து. கூடவே, நீ தான் நான் என்வாழ்வில் சேகரித்த அன்புச் சொத்து.

A. சஹாத், சம்மாந்துறை.

தமிழ் PC TIMES ஐ, தகவல் தொழில்நுட்ப அறிவுத் தாகத்தை தீர்க்கும் ஓர் அட்சய பாத்திரம் என்று கூறுவது மிக மிகப் பொருந்தும்.

M.S.M. ஹிப்லான், பேருவளை.

தமிழ் PCTIMES ஐ அடைவதற்கு

Mail Box, Tamil PC TIMES, Wijeya Newspapers Ltd.,
No. 08, Hunupitiya Cross Road, Colombo -02.
Email: pctimes@wijeya.lk

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் கருத்தை வெளிப்படுத்தும் பொருட்டும் குறுகிய இடத்தைக் கருத்திற் கொண்டும் தொகுக்கப்படலாம்.

# இணைய வெளி

## ◈ இது ரொம்பப் பெரியது!




இணையத்தளங்களின் முகவரிகளை சுருக்கமாக வைத்துக் கொள்ளவே அனைவரும் விரும்புவர். இவ்வாறு நீளமான இணைய முகவரிகளை சுருக்கித் தரும் இணையச் சேவைத்தளங்களும் இணையப்பரப்பிலே காணப்படுகின்றன. இது இவ்வாறிருக்க, இப்படியொரு இணைய முகவரி கொண்ட தளம் காணப்படுகின்றது. இணைய முகவரியை வாசிக்க முன் மூச்சையொருமுறை இழுத்துப் பிடித்துக்கொள்ளுங்கள். ம.... இப்போது வாசியுங்கள்.

**http://www.abcdefghijklmnopqrstuvwxyzabcdefghijklmnopqrstuvwxyzabcdefghijk.com**

என்ன தலைசுற்றுகிறதா? இதுவும் ஒரு இணைய முகவரிதான். இந்த இணையத்தளம் என்ன சேவையை வழங்குகின்றது என அறிவீர்களாக? இலவசமாக பயனர்களுக்கு மின்னஞ்சல் முகவரிகளை வழங்குகின்றது. உலகிலேயே மிக நீளமான மின்னஞ்சல் முகவரியை நீங்கள் பெற விரும்பினால் இந்தத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் வழங்கிய Username இனை இணைத்து @ என்ற குறியீட்டிற்கு பின்னால், இவ்விணையத்தளத்தின் முகவரியைக் கொண்டதான மின்னஞ்சல் முகவரியைப் பெறலாம். ஆனாலும் இது ரொம்பவும் பெரியதுதான்.

இப்படியொரு முகவரியைப் பெற்று நீங்கள் உங்கள் நண்பரிடம் e-mail அனுப்பச் சொன்னால், நண்பர் உங்கள் மின்னஞ்சல் முகவரியை Type செய்ய.... It's funny

தமிழ் மொழியில் யுனிகோட் (Unicode) எழுத்து முறையைப் பயன்படுத்தி பல இணையத்தளங்கள் இணையப்பரப்பிலே காணப்படுகின்றன. BBC செய்திச் சேவையின் இணையத்தளம் பல மொழிகளிலும் காணப்படுகின்றது. தமிழ் மொழியிலமைந்த BBC தமிழ் இணையத்தளம் செய்தி, வானிலை, நினைவில் நின்றவை, சிறப்புக் கட்டுரைகள் என பல விடயங்களை அள்ளி வழங்குகின்றது.

**BBC தமிழ்**




அத்தோடு, இவ்விணையத் தளத்தில் கருத்துக்கணிப்பீடும் நடாத்தப்படுகின்றது. அது மட்டுமல்லாது, தென்னாசிய நாடுகளின் செய்திகளுக்கான (ஆங்கிலம்) தொடுப்பும் இவ்விணையத் தளத்தில் காணப்படுகின்றது. இவ்விணையத்தளத்தின் முகவரி http://www.bbc.co.uk/tamil/ என்பதாகும்.

## ◈ இது ரொம்பச் சிறியது



உலகிலே கின்னஸ் சாதனைகளை நிலைநாட்டுவதற்கு சாதாரண அளவிலுள்ள பொருள்களை ஆகச் சிறியதாக, அல்லது மிகப்பெரியதாக உருவாக்கும் வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. ஆனால் இங்கு நான் சொல்லப்போவதென்னவோ கின்னஸ் சாதனை இல்லை... ஆனாலும் அதனை நிகர்த்த ஒரு நிகழ்வுதான்....

மிகச்சிறிய கணினி, மிகச்சிறிய வாகனம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் மிகச்சிறிய இணையத்தளம் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? இங்கே இணையத்தளத்தின் அளவையே குறிப்பிடுகின்றேன். மாறாக அதன் கொள்ளளவை இல்லை.

உலகிலேயே மிகச்சிறிய இணையத்தளம் htt://www.guimp.com எனும் முகவரியிலுள்ள GUIMP என்பதுதான். இவ்விணையத்தளம் பல கணினி விளையாட்டுக்களை தன்னகம் கொண்டுள்ளது ஆச்சரியம்தான். Pong, Pacman, Space Invaders, Classic Pinball, Football என இங்கு காணப்படும் கணினி விளையாட்டுக்களை விரித்துக் கொண்டு பட்டியற் படுத்தலாம். இன்னும் Blog மற்றும் Pixel Art ஆகியவற்றையும் இந்தத் தளம் கொண்டுள்ளது மிகவும் அதிசயமான விடயமே.

இத்தனை விடயங்களையும் கொண்டுள்ள அந்த இணையத்தளத்தின் அளவினை உங்களால் ஊகிக்க முடிகின்றதா? வெறும் 18 pixels x 18 pixels ஆகும். இது ரொம்ப ரொம்பச் சிறியது.

உலகின் மிகச் சிறிய இணையத்தளத்திற்கு சென்றுதான் பாருங்களேன்.


தமிழ்
PC TIMES
தேனீர் பரிமாறும் ரோபோ
ஜப்பானில் டோக்கியோ பல்கலைக்கழகத்தின் ஆய்வுகள் பிரிவின் இன்னொரு புதிய படைப்பு.
wijeya newspapers
விஜய்
Printed & Published by Wijeya Newspapers Ltd., No.8, Hunupitiya Cross Road, Colombo - 02.